

தொகுதி 13 பகுதி 11

ஆவணி - 1 17—8—1991

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமரகுருபரர்

ஸ்ரீ காசிமடம் திங்களிதழ்

தொகுதி 13 17-8-91 பகுதி 11



ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமரகுருபரர் அருள்வாக்கு

—0—

நின்னலாது அவனில்லை
அவளலால் நீயில்லை
என்னின் நீயே அவனும்
அவளுமாய் இருத்தியால்

ஸ்ரீ குமரகுருபரர்

உட்பொருள்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
''கயிலைமாமுனிவர்''

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

நிலைக்காகவும், திறம் உணர்தற்காகவும், ஆர்வம் மிகுவிப்பதற்காகவும் போட்டிகள் நிகழ்விப்பது வழக்கம். அறிவு, கலை, உடல்திறன் முதலிய நிலைகளில் போட்டிகள் நிகழும். யார்வென்றார் என்ற அறிவிப்புக்கு உட்படுத்தப் படாத நிலையில் நிகழ்வாக அமையும் சிலவும் வேறொரு காலத்தில் வேறொரு இடத்தில் நிகழ்ந்த அதனினும் சிறந்தது அல்லது குறைந்தது எனப் பெயர் பெறுமாயின் அதுவும் போட்டியாகவே கருதப்பெறும்.

ஒருதுறை முதன்மையான நிலையில் வல்லவர் எனப் பெயரெடுத்தவர் போட்டிக்கு வந்து விட்டால் அப் போட்டியைக் காண்பவர்கள் யாவருக்கும் அவரே வெற்றி பெறுவார் என்ற உறுதி தோன்றிய மனோ நிலையில் அவர் பால் ஒரு சார்பு ஏற்பட்டு விடும். அச்சார்பு மனோ நிலை வெற்றிப்படி ஒவ்வொன்றற்கும் குதூகலிக்கும். அதன்

செயற்பாடு தோல்வி எய்தி வருபவரின் உரத்தைப் பாதிக்குமோ என்று கருதுவதுமில்லை.

வல்லார் ஒருவருடன் மேற்கொள்ளும் போட்டியில் அடுத்த திறமையாளர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இதுவரை யாரும் உபாயம் சொன்னதாகத் தோன்ற வில்லை. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிதம்பரச் செய்யுட் கோவையின் 71 ஆம் செய்யுளில் இந்தக் காரணத்தால் இரண்டாமவருக்குத் தோல்வி கிட்டியது என்று கூறுமுகத் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிவிக்கிறார்கள்.

முதன்மையாளர் எனப் பெயர் பெற்றவரின் குறைகள் இருக்குமாயின் அதை அவதானிக்க வேண்டும். அவ்வாறு இருத்தற்கு வழியில்லையாகையால் அவர்தம் செயலை வியந்து நோக்கக் கூடாது. அவ்வாறு வியந்து நோக்கினால் பிரமிப்பு ஏற்படும். அது நம் செயற்பாட்டின் உண்மைத் தன்மையைக் குறைத்துவிடும். ஸ்ரீ சுவாமிகள் குறிப்பிடும் நிகழ்ச்சியிலிருந்து இவ்வழி முறைகளை நாம் கண்டெடுக்க முடிகிறது.

ஸ்ரீமந் நடராஜப் பெருமான் ஆடல் வல்லான். ஸ்ரீ காளி தேவியும் ஆடல் வல்லவளே. எனினும் நாட்டியக் கலை என்றால் ஸ்ரீமந் நடராஜப் பெருமானையே முதலாகக் கருதுவது வழக்கம். இருவரும் ஓரிடத்தில் நடனமாடினால் யார் வெல்வார்கள் என்று சிந்திப்போம். இந்தச் சிந்தனையில் சமத்துவம் என்பதைக் காட்டிலும் மகத்துவம் என்பது மிக முக்கியமாகும்.

ஸ்ரீ காளிதேவி வென்ருள் என்று முடிப்பதில் சில பிழைபாடுகள் வரும். பெருமானுக்கு மனைவி, தாய், தங்கை மகள் என அனைத்தும் என அப்பெருமாட்டியின் தன்மைக்கு அது உடன்பாடாக அமையாது. அன்னை தோற்ருள் என்று சொல்வதற்கும் ஸ்ரீ சுவாமிகட்கு உடன்பாடில்லை.

முதலில் ஸ்ரீ காளிதேவி ஆடினுள். பின்னர்ப் பெருமான் ஆடினூர் என்று முதலில் அறிவிக்கிருர். ஆடல் வல்லானுகிய பெருமான், அதுபோது அங்கு ஆடியிருக்கவேண்டாம் என்ற குறிப்பு இதில் பொதிந்திருக்கிறது எனலாம். பெருமான் ஆடிய ஆட்டத்தைப் பார்த்த ஸ்ரீ காளிதேவி மிகுந்த வியப்படைந்தாள். அந்தப் பிரமிப்பு வெற்றியைப் பாதிக்கும் என்பது நியதியாகையால் அவள் தோற்ருள் என்கிருர். அவள் வியக்கவில்லையென்ருல் தோற்றிருக்க மாட்டாள் என்பது குறிப்பு. எனவே அது திறன் குறைந்த காரணத்தால் ஏற்பட்ட தோல்வியாகக் கருதமுடியாது.

மிகுதிறனுளர் வென்ருல் அதுபோது முன்னதாகவே சார்புமனம் ஏற்பட்டவர்கள் மிதூகலிப்பார்கள் என்னும் நியதிப்படி இந்நிகழ்ச்சியைக்கண்ட பேய்கள் குதூகலித்தன எனப் பாடலை ஸ்ரீ சுவாமிகள் நிறைவு செய்கிருர்கள். அப்பாடல் வருமாறு:

காளி யாடக் கனலுமிழ் கண்ணுதல்
மீளி யாடுதல் பாருமே
மீளி யாடல் வியந்தவள் தோற்றெனக்
கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே.

இக்கலித் தாழிசை, இருபெரும் தெய்வங்களின் செயலை விமரிசிக்கும் கற்பனைகளை எவ்வளவு எச்சரிக்கையுடன் செய்ய வேண்டும் என்பதற்குத் தக்க உதாரணமாகும். ஆண்டவனின் பெருமைக்கும் அம்பிகையின் பெருமைக்கும் மிகுதி குறைவு ஏற்படாமல் ஏற்றத்தாழ்வு கற்பிக்காமல் அதே நேரத்தில் சுவைநலம் குன்றாமல் இப்பாடற் கருத்து வெளிவருவது ஐயனின் ஆடலைக் கண்டு அம்பிகை வியந்ததைப் போலவே ஸ்ரீ சுவாமிகளின் பாடலை நாம் கற்று வியக்கச் செய்கிறது.

இத்திருப்பாடலையொட்டி "இஃது இரண்டாமடி குறைந்து இடைமடக்காய் ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை என்னும் செய்யுளிலக்கணக் குறிப்புக் காணப் பெறுகிறது.

"மீளி யாடுதல் பாருமே"

என இரண்டாமடி மூன்று சீர்களால் வருதலின் இரண்டாமடி குறைந்தது என்றார். "மீளியாடுதல் என்பது மூன்றாமடியின் தொடக்கத்திலும் வருதலின் இடைமடக்காயிற்று.

ஈற்றடியாகிய நான்காமடி,

கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே

என ஐந்து சீர்களான் வந்தமையால் ஈற்றடி மிக்குவந்த தாகிறது.

சிவ சிவ

ஸ்ரீ காசிமடம் செய்திகள்

1—7—91 அன்று மட்டியூர் திருக்கோயில்களின் குடமுழுக்கு விழா நிகழ்ந்தது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் குடமுழுக்கு விழாவிற்கு எழுந்தருளிச் சிறப்பித்து வழிபாடாற்றினார்கள். அவர்களுடன் 'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களும் விஜயம் செய்து தரிசித்தார்கள். அன்று பிற்பகலில் ஸ்ரீ காசிமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை 'கயிலைமாமுனிவர்' அவர்கள் கொலுவிலிருத்தி வழிபட்டார்கள். அன்பர்கள் தொழுது பிரசாதம் பெற்றார்கள்.

4—7—91 அன்று காலை திருவைகல் அருள்மிகு அழகப்பரைர் திருக்கோயில் திருப்பணித் தொடக்க விழாவிற்குக் கயிலைமாமுனிவர் அவர்கள் விஜயம் செய்து திருப்பணியைத் தொடங்கி வைத்தருளினார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் திருத்தல வழிபாடாற்றி 8—7—91 அன்று மாலை காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களும், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களும், ஸ்ரீ காசிமடத்துக்கு விஜயம் செய்து 'கயிலைமாமுனிவர்' அவர்களுடன் அளவளாவினார்கள்.

மேலையூர் சீனிவாசா மேனிலைப்பள்ளியில் 12—7—91 அன்று மாலை நிகழ்ந்த இலக்கிய மன்றத் தொடக்க விழாவிற்குக் 'கயிலைமாமுனிவர்' அவர்கள் எழுந்தருளி ஆசியுரை வழங்கினார்கள்.

14—7—91 அன்று மாலை ஆடுதுறை ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் ஆலயத்தில் ஆதிவார இராகுகால துர்க்கை வார வழிபாட்டுக் கழகத்தின் 7-ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சந்தனக் காப்பு அலங்காரமும் நிகழ்ந்தன. இவ்வைபவத்தில் 'கயிலைமாமுனிவர்' அவர்கள் கலந்துகொண்டு வழிபாடாற்றி அருளாசி நல்கினார்கள்.

சொக்கநாதர் திருஎழுச்சி

(தொடர்ச்சி)

ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
காறுபாறு, ஸ்ரீ காசிமடம்

கூப்பிய கரத்தால் குழைத்த பஞ்சாமிர்தம்
ஆவின் பால்தயிர் அதன்நெய் கவ்வியம்
தேன்கரும் பின்தெளி தெவிட்டா பழவகை
தெங்குநீர் குச்சிபுல் சகசர தாரா
கொம்புடன் வலம்புரி இடம்புரிச் சங்குகள்

பன்னீர் சந்தனம் பலப்பல ஆட்டி
நன்றாம் பதினாறு இன்உப சாரம்
ஒன்றிச் செய்தபின் ஓங்கிக் கரம்கூப்பி
வென்றுளே புலன்கழித்து வெண்ணீறு பூசி
மன்னுயிர் வாழ மங்கல பூசை

நன்றாய்ச் செய்ய நயந்து ஏற்று
பொன்னிநீர் பாய்ந்து பொலிவுறும் திருமையில்
நன்னர் அருளும் நம்பன் சொக்கன்
எம்முடை பிரதமத் தம்பிரான் தோழன்
இம்முறை முத்துக் குமார சாமித்

தம்பிரான் என்றும் தரணி யாள
கைம்மா றில்லா கரம்சொரி வள்ளல்
எங்கும் உயிர்கள் இனிதே வாழ
பங்குனிப் பரணி நன்னாள் தன்னில்
அவத ரித்த அற்புதத் திருமகன்

நவத்தால் சிறந்த தானச் சீலர்
அறுபதாம் ஆண்டு அந்நிறை விழாவில்
பெறுவது ஓர்பயன் என்ன என்று
அன்னோர் உள்ளம் அத்தை விளக்க
முன்னோர் பூசை முறைபலன் கூட்ட

நடைமுறை யாத்திரை நயந்து வருவேன்
தடையே தன்பில் தலைப்பட்டார்க் கென்று
வான்நிழல் மூலம் வளர்தருமை குருமணி
கோன்குணக் குணர்த்த குறிபல கிடைக்க
ஆயிரத் தோடு தொள்ளா யிரமும்

மேவிய பின்வரும் தொண்ணூற் றொன்றில்
மார்ச்சுத் திங்கள் பதினான் காம்நாள்
சார்பகல் ஒருபதின் மேலொன் றும்மணி
ஆடக மதுரை ஆலவாய்ச் சொக்கன்
ஏடவிழ் தருமை இலங்கும் பெருமான்

நாடகம் போற்றும் நற்புகழ்ப் பனசை
நாடும் மனத்தொடு திருவெழுச்சி கொள்ள
நதியெனப் பாய்ந்து நல்லருள் சுரக்கும்
பதியாம் எமக்குப் பண்புடைக் குருமணி
ஓமென மறைபோற்ற உத்தமர் சிவவென

தாமே எடுத்துத் தலைமீது வைத்து
அடியார் கூட்டத் தாமவர்க் குணர்த்த
முடிமீது சுமந்து பூசைமடம் வல்மாய்
வடக்குப் பக்கம் வளைவு வரைக்கு
நடந்த பாங்கு நயனம் ஆயிரம்

பெற்றோர் தாமே பெற்றார் முழுச்சுகம்
நற்றவத் தாயாம் நம்எஜமான் சுவாமி
தானங் கிருந்து தலைதனில் சுமக்க
வானவர் பூவுலகு வந்தனர் காண
மயிலா டுதுறை மக்களின் நெகிழ்ச்சியில்

நயந்திடும் சொக்கர் முதல்நாள் தங்கினார்
ஆசிகள் கூறி அவ்விட மிருந்து
பாசம் நீக்கும் பரமன் புறப்பட்டு
ஆலந் துறையப்பர் மூவலூர் திருக்கோயில்
சீலம் பெருகும் சித்தர் காடு

ஆல யங்கள் அமர்ந்தினி(து) ஆசி
பாலன் முதலாய்ப் பாமரர்க் கருளி
குத்தாலம் நகரில் குலவி இருந்தனர்
பக்தர் காண பூசையை ஏற்று
அவ்விடம் அனைவர்க் காசி கூறி

செவ்விதாய்த் புறப்பட்டு கதிரா மங்கலம்
நற்றாய் துர்க்கை நன்கோயில் கண்டு
பொற்றாள் பூசை புரிந்தபின் அங்கிருந்து
திருக்கோ டிக்காவல் திருக்கோயில் வலத்தோடு
பெருவளம் சுரக்கும் பெம்மான் கோவாய்

தவமிருந் தருளும் கஞ்சனூர் நகரில்
நலம்புரி பூசை நயந்து ஏற்றார்
திருவருள் தவநெறி மன்றம் மக்கள்
பெருவாழ் வெய்த பேரின்பம் நல்கி
பதினேழாம் தேதி ஞாயிறு கிழமை

பதியாம் கடவுள்மேல் நதியென அன்பு
நயந்து சுரக்கும் நம்குரு மணியுடன்
இயைந்து வரவே திருமங் கலக்குடி
திருக்கோயில் புகுந்து திகழ வலம்வந்து
பெருவழி நடந்த பெரும்பே றெனவே

பத்தர் புடைவரப் பாங்குடன் நடந்து
அத்தன் உவந்து அருள்செய் மணிக்குடி
நகரும் சென்று நன்மக்கள் உயர
அகத்தொடு ஆசி அளித்து உடனே
பனந்தாள் நகரின் பத்தர் சித்தர்

மனமொன்றி இருந்து மகிழ்ந்திடு மக்கள்
பாவையர் ஆடவர் பள்ளியின் மாணவர்
கோவைகள் பாடியும் கும்மிகள் கொட்டியும்
குரவைக ளிட்டும் கொம்புகள் ஊதியும்
வரவேற் பளித்திட வளைவுகள் கட்டியும்

மாவிலைத் தோரணம் மங்கல வாழைகள்
தீவிய கரும்பு தெங்கிளங் குலைகள்
மின்விளக் கலங்காரம் மிகவாய் வரவேற்க
சின்னமுடன் துந்துபி தாளம் அதிர்வெடி
நாதசுரம் மேளம் நல்முக வீணை

போகும் வழிதொறும் பொற்குடை கவரி
எடுபிடி தீவிட்டி குங்குலியம் புகையை
நடுவில் இட்டு நறுமணம் கமழ
சொக்க லிங்கம் ஞான சம்பந்தம்
பக்கத் தில்நின்று பலரும் ஓத

பல்தரும் அஞ்செழுத் தோதியும் தேவாரம்
நல்திரு வாசகம் நயப்புடன் ஓதியும்
மன்னவன் சொக்கன் பனசை மாநகர்
அன்பரு டன்கூடி ஆனந்தம் விளையாடி
பொக்க மில்லா பொதுவாழ் வளிக்க

மக்கள் வெள்ளத்தில் மகிழ்ந்தாடி வந்தார்
நாமகிரிப் பேட்டை நல்கிருஷ் ணனுடைய
சேம நாதசுரம் செவியமு தூட்ட
திருவாளப் புத்தூர் கலிய மூர்த்தி
அரித்து வார மங்கலம் பழனிவேல்

இவர்கள் மேளம் இணைந்து கொட்ட
தவராசர் மணிவிழா மங்கல இசையுடன்
பதினே மாந்தேதி பனசை நகராம்
பதிதன்னில் பாங்காய் பிள்ளையார் சுழிபோட
அடுத்த திருநாள் அன்று காலை

மடுத்த செவிக்கு மங்கல இசையால்
மோகன்தாஸ் குழுவொடும் கிளாரினெட் இசையால்
தாகமது நீக்கும் திருச்சி நடராசன்
குழுவினர் நடத்திய இசையைத் தொடர்ந்து
தழுவுமோர் அன்பில் தலைப்பட்ட மக்கள்

581

இணைந்தோர் வாழ்வு இனிதே பெற்றிட
துணையொடு தொடர்ந்த எண்பதாம் வயதில்
சுப்பிர மணிய அய்யரும் லெட்சுமியும்
செப்பும் சதாபி சேகம் சிறப்புற
மடத்தில் வரலாறு காணா வகையில்

நடத்தி வாழ்த்தி நலம்பெறப் போற்றி
திருநாவுக் கரசொடு மங்கையர்க் கரசியும்
திருநாவுக் கரசொடு சரஸ்வதி நங்கையும்
இராசேந் திரனொடு ஜெயந்தி நங்கையும்
இராசேந் திரனுடன் செல்வி நல்லாளும்

இரமேஷ் தன்னுடன் பானுமதி பாவையும்
இரமேஷ் உடனே தேவகி தேவியும்
அன்பழகன் சாந்தாவும் அன்புடன் கண்ணகியும்
நன்துரை இலஞ்சியும் நற்சேகர் சித்திராவும்
தமிழரசன் மகேசுவரி தனபால் லதாவும்

தமிழ்ச்செல்வி முருகனும் பாஸ்கரன் மலர்க்கொடி
மோகன் லதாவும் முருகன் வளர்மதியும்
மோகன் சசிகலா முருகேசன் சகுந்தலா
சாந்தி நங்கையும் இராம லிங்கமும்
காந்தி மதியொடு நடராசன் நம்பியும்

கண்ணன் மல்லிகா சதாசிவம் ரேவதி
தண்ணூர் செல்வமும் இந்திராணி நங்கையும்
இரவிச்சந் திரனும் இராச லெட்சுமியும்
இராம லிங்கம் உமாபதி நங்கையும்
நடரா சனொடு மணிமே கலையும்

தடங்கண் மீனாட்சி இராசேந் திரனும்
மலர்க்கொடி யுடனே நாகூ ரானும்
நலன்இராம மூர்த்தி நற்சரஸ் வதியும்
காசி லிங்கமும் பிரேமா வதியும்
மாசில்இம் முப்பது தம்பதி தமக்கும்

ஆசில் நற்புகழ் அவனியில் வளர்க்கும்
காசி வாசி கயிலைமா முனிவர்தம்
நற்கருணை பொழிவால் நயந்து மங்கல
பொற்பூட் டணிவிழா பொதுமக்கள் நடுவில்
சிறப்புடன் நடத்திய செய்கையும் நடந்தது

நடம்புரி சொக்கன் நற்பூசை கண்டு
திடம்புரி நெஞ்சும் திவ்வியம் வாய்ந்து
தருமைக் குருமணி திருக்கரம் தன்னால்
பெரும்புகழ் படைக்கும் பெம்மான் கயிலைமா
முனிவர் மணிவிழா நினைவுக் கலையரங்கம்

தனிச்சிறப் புடனே தாம்திறந் துவைக்க
வாரி வழங்கும் வள்ளல் பொள்ளாச்சி
மாரியம்மாள் மகாலிங்கம் மங்கள விளக்கேற்ற
காசிமடம் கல்விசால் மாணவ மாணவியர்
ஆசிரியர் இருபாலர் ஊர்வலம் வந்தாசி
பெற்று மகிழ்ந்து பேருவகை கொண்டனர்
நற்றாள் தொழுது நன்பேறு பெற்றபின்
குருவே சிவமெனக் கூறிய சொற்கு
தருமோர் பயனைத் தானிருந்து பூசை

செய்து மகிழ்ந்தார் சிறப்புடை எஜமான்
பெய்தவோர் அன்பால் பெரும்பா லோர்களுக்கு
அன்னம் பாலிப்பு அருமையாய் நடந்தபின்
மன்னவன் புகழ்பாடும் மாலை நிகழ்ச்சியில்
செயராமன் வரவேற்பு சிறப்புடன் நல்கினார்
நயந்துற வாடும் நம்சிரவை யாதீனம்
சுந்தர சுவாமிகள் முந்துரை வழங்கினார்
தலைமையுரை நிகழ்ந்தபின் குறிஞ்சி பாலுவும்
புலமை சான்ற குருசாமி தேசிகர்
சிவசந் திரனும் செல்வ கணபதியும்
சிவப்பற் றுயர்ந்த வெங்கட் ராமனும்
ஞானம் தாண்டகம் யோகம் வாசகம்
ஊனம் நீக்கும் உன்மந்தி ரதமிழ்
என்னும் இவ்வகை எழில்தலைப் பெடுத்து
நன்று பேசினர் நல்லவை மகிழ்வுற

ஞான சம்பந்தன் நல்ல சிறப்புரை
தீந்தமிழ்க் காவியம் திறம்பட உரைத்தும்
வேரி பிலிற்றி விரிமலர் மணக்கும்
சூரியனார் கோயில் சன்னி தானம்
திருமந்திர மாலை திருமந் திரமும்

இருநூல் இவற்றை வெளியிட் டருளினர்
அரங்க சாமியும் கந்த சாமியும்
வரமிது எனவே வகையாய்ப் பெற்றனர்
பேரூர் ஆதினம் தவத்திரு அடிகளார்
ஓரூர் பதினோராம் திருமுறை அதனை

சீரூர் நலம்சொலி சிறப்புடன் வெளியிட
பேரூர் பெரும்புகழ் பெரும்பற்ற புலியூர்
பால சுப்பிர மணியம் செட்டியார்
சால ஏற்று சரணம் சொல்லவும்
திண்பனி ரண்டாம் திருமுறை யதனை

நண்ணிய ஒருமை யன்பால் நயந்து
சிரவை ஆதினம் சிறப்புடன் வெளியிட
வரமென ஞான தான வள்ளல்
நேசன் மகாலிங்கம் நெகிழ்ந்து பெற்றிட
காசித் திருவருட்பாத் திரட்டு நூலை

மயிலம் ஆதின கர்த்தர் வெளியிட
கயிலை செங்கோட் டையன் பெற்றிட
செந்தமிழ் கனியும் கந்த புராண
முந்நூறு நூலின் மூன்று தொகுதியும்
தொண்டை மண்டல ஆதீன கர்த்தர்

பண்புரை ஆற்றி பாங்குற வெளியிட
உரைசால் பால கிருஷ்ணன் அவர்களும்
துரைராஜ் என்னும் தூயநல் அன்பரும்
இறையன் புமிகும் கோபாலன் அவர்களும்
முறையுற மகிழ்ந்து முன்வந் தேற்றனர்

முப்பு வந்தணுகா முறைபெற வேண்டி
முப்பனார் அவர்கள் முனிவரை வாழ்த்தினார்
உரையரங்க நிகழ்ச்சி ஒன்பது மணிக்கு
நிறைவுற குமரகுரு காவணம் அதனில்
சீர்காழி டாக்டர் சிவசிதம் பரத்தின்

சீர்மிகு இன்னிசைச் சிறப்பாய் நடந்தது
பத்தொன் பதாம்தேதி பகல்நேர நிகழ்ச்சி
நித்திரை கலைந்து நீள்வான் சிவக்குமுன்
மக்கள் மற்றுள மன்னுயிர் வாழ்ந்திட
சொக்கர் பூசையை சுந்தரமாய் செய்தபின்

சேது ராமன் பொன்னுசாமி குழுவினர்
நாதமிகு குழலின் மங்கல் இசையொடு
இரண்டாநாள் நிகழ்ச்சி இனிது துவங்க
சிரமது சாய்த்த சிவலிங்க வழிபாட்டு
திருநாள் காலை சிவபூசை வழிபட்டும்

பெருமான் சொக்கன் பெரும்பூசை கண்டும்
நஞ்சணி கண்டர் நண்ணிய பனசையுள்
செஞ்சடைச் செம்மல் திருக்கோயில் தன்னில்
மேகம் பொழிந்து மேதினி செழிக்க
ஏகாதச ருத்ரம் வசோத்தாரா ஹோமம்

குருமணி தன்னுடன் கோயில் வழிபட்டு
பெருவரம் மாகிய பேற்றினைப் பெற்றபின்
பெரும்சீர் சுப்பு லெட்சுமி மோகன்
திருமுறை நிகழ்ச்சி சிறப்பாய் முடிந்ததும்
அன்ன பூர்ணா நாக ராசன்

இன்னிசை நிகழ்ச்சி இனிதுற முடிந்தபின்
இன்னமார் பாலிப்பார் இதுபோல் எனவே
அன்னம் பாலிப்பு அழகுற நடந்தது
திருவிளக்கு வழிபாடு திருமதி பவானி
கிருஷ்ணன் நாயரின் தலைமையில் நடந்தது

விவசாய குடிமக்கள் விழாவொன்று எடுத்து
தவம்செய் தோமென ஊர்வலம் வந்தனர்
கதிரவன் ஒய்வு கொள்ளுதற் காக
நதிமலை அடுக்கும் நன்மாலைப் போதில்
திருவண் ணாமலை ஆதீன கர்த்தர்

திருமுன் னிலையில் நிகழ்ச்சி தொடங்கிட
மெய்கண்டார் அருள்நந்தி மறைஞான சம்பந்தர்
உய்யும் உமாபதி அருளிப் பாடுகள்
என்ற நான்கு தலைப்புக் கொண்டு
நன்னர் சிவத்துறை இராம சந்திரன்
(தொடரும்)

மணிவிழா வாழ்த்துக் கவிதைகள்

மாசில்லா சைவமும் மதிப்பான தமிழமிழ்தும்
காசிமடந் தன்னிலே கண்களாய்த் திகழ்கின்ற
பெருமையினை நாட்டோரும் பெருமகிழ்வு எய்திட்டே
உரிமையுடன் கூறிட்டார் உண்மையது தானன்றோ!
அமரர் பெருந்தெய்வம் ஆற்றலுடைய சன்னிதானம்
குமர குருபரனார் கொடுத்திட்ட இம்மடத்தில்
முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளின்
சொத்தான இறையருளே சோதியாய் ஒளிர்கிறது!
வானுயர்ந்த கோபுரத்தை வனதுர்க்கா ஆலயத்தில்
தானுயர்த்திக் கட்டிட்ட தகைசான்ற தம்பிரானின்
பக்தியினை எண்ணியே பரவசம் காண்போர்க்கு
முக்தியே கிடைத்திடும்; முயற்சியது வேண்டாமே.
திருப்பனந்தாள் கல்லூரி திசையொக்கும் புகழ்காண
பெருந்தனமே அளித்திட்டு பெருங்கலைக் கல்லூரியாய்
மாற்றிட சுவாமிகளின் மகத்தான சாதனையே
ஆற்றிட்ட பணிகளுக்கு அணியாக விளங்குகிறது.
குருத்துவப் பணியோடு குவலயத்தார் நலம்பெறவே
மருத்துவ மனையினையும் மகிழ்வோடு தந்திட்டார்;
வழிபாட்டு முறையாலும் வாஞ்சைமிகு அன்பாலும்
அழியாத புகழ்கண்ட அய்யாவும் வாழியவே!
பாரெல்லாம் பாராட்ட பாங்காக மணிவிழாவை
ஊரெல்லாம் கொண்டாட உற்றோரின் வாழ்த்தோடு
இன்றைக்குக் காண்கிறோர் இதயத்தில் மகிழ்வோடு
என்றைக்கும் இப்படியே எழிலோடு வாழியவே! !

இங்ஙனம்,
ச. சலியமூர்த்தி பிள்ளை,
க. சிவசுப்பிரமணியன்,
மற்றும் திருமுருகன்
அரிசி ஆலை ஊழியர்கள்,
கதிராமங்கலம்.

பங்குனிப் பரணியில் தோன்றிப் புகழுடன் பனசையில் காசிமடந்தனில் அருளாட்சி நடத்தி மணிவிழாக் காணும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் வாழ்க பல்லாண்டு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே காசிமடத்துத் திருப்பணிகளில் ஈடுபட்டு 18 ஆண்டுகளாக நல்லாட்சி புரிந்து விளங்கும் சுவாமிகள் அவர்கட்கு வணக்கம்.

பனசையில் செந்தமிழ்க் கல்லூரியைக் கலைக்கல்லூரியாக்கி மாணவர் திலகங்களைத் தோற்றுவித்துவரும் சுவாமிகள் அவர்களின் நற்பணி போற்றுதற்குரியது.

ஆதிகுமரகுருபரர் புகழை நாளும் பரப்பிவரும் வகையில் 'குமரகுருபரனை' 'ஸ்ரீ குமரகுருபரர்' ஆக்கிப் பனசையில் திங்கள் தோறும் 'பெருமான் புகழ்' பரப்பிவரும் சுவாமிகள் அவர்களின் செயல் போற்றி.

நாடு முழுவதும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்களின் 300ஆவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடச் செய்தருளிய சுவாமிகளின் புகழ் ஓங்குக.

அமர்நாத், கேதார்நாத், பத்ரிநாத், பசுபதிநாத், முக்திநாத், விசுவநாத் ஆகிய திருத்தலங்களை வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் தரிசித்துவரும் சுவாமிகள் திருக்கயிலாய யாத்திரையையும் மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் திரும்பியதைப் பாராட்டும் வகையான், தருமைக் குருமகா சந்நிதானம் அவர்கள் 'கயிலை மாமுனிவர்' என அன்புடன் சுவாமிகளுக்குப் பட்டம் வழங்கியருளியமை வரலாற்றுச் சிறப்புடையதன்றோ. இத்தகைய சிறப்பைப் பெற்ற சுவாமிகள் அவர்கள் நீடுழி வாழ்க.

தில்லை அருகில் தோன்றிய சுவாமிகள் தில்லைக் காசிமடத்தை புதுப்பித்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளுக்கு நினைவாலயம் அமைத்தமை இன்புறற்பாலது.

வாரணாசி ஸ்ரீ கேதாரீசுவரர் ஆலயத்தில் கௌரியம்மனுக்கு நூதனச்சிலை அமைத்து ஆலயத்திருப்பணிகள் செய்வித்துச் சிறப்பாகக் குடமுழுக்கு விழா நடத்தியருளியமை சுவாமிகள் அவர்கள் திருத்தொண்டின் சிகரமாகும்.

சைவசித்தாந்த மாநாட்டைக் காசியில் நிகழ்வித்ததோடு, சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க அறச்செயல்கள் பல புரிந்தருளும், ஞாயிறில் தோன்றிய சுவாமிகள் அவர்கள் ஞாயிறு போலப் பல்லாண்டு வாழ்க எனப்போற்றி வணக்கங்கலந்த நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்,
க. சுப்பிரமணியன்,
தியாகராச விலாசம்
திருவேட்டீசுவரன் பேட்டை,
சென்னை-600 005.

தம்பிரான் தோழரைவண் தொண்டர் என்போம்
தயைமிகும்நம் "கயிலைமுனி" தொண்டில் மிக்கார்
எம்பிரான்எம் பிரான்என்றே எளியோ ரேத்தும்
இனிமைதரும் இதயம்அமை எங்கள் பெம்மான்
முன்பிரான் அருள்நந்திக் கோமான் தேர்ந்த
முத்துக்கு மாரமுனி பூம்பொற் பாதம்
என்புடன் உயிருருகப் போற்று கின்றோம்
எழில்மணிவி ழாக்காணும் திருநாள் தன்னில்.

எம்பெருமான் பணிசொல்லில் விண்ணி லுள்ள
எண்ணில்லா விண்மீனின் எண்ணும் கீழாம்
எம்பெருமான் கல்விக்குப் பயிற்சிப் பள்ளி
ஏற்றமிகும் கல்லூரி பலவாம் பள்ளி
தம்பரவும் அடியார்க்கு வீடு மற்றும்
மணப்பந்தல் பிறவெல்லாம் ஈயும் வள்ளல்
செம்மைமிகும் அறம்கோடி தினமும் ஆக்கிச்
செந்தமிழும் சைவமும்சீர் பெருக்கும் தேவே!!

கண்டார்க்கு அருட்காட்சி நல்கி நின்றாய்
காணார்க்கு "உரையாலே இன்பம் தந்தாய்"
எண்டிக்கும் காசிமடம் பெருமை கூட
ஏற்றவழி தினம்தினமும் செய்யும் நாதா
வண்டார்க்கும் பூஞ்சோலை பனந்தா ளில்எம்
வாழ்விற்கு வழிகாட்டும் சீல இன்று
கண்டாய்நீ மணிவிழாவும் அகிலம் போற்ற
காத்திடுவாய் கற்பகமே வாழி!! வாழி!!

இன்னணம்,
தையல்தொழிற் கலைஞர் சங்கம்,
திருப்பனந்தாள்.

குமரகுருபரரும் மருத்துவமும்

நெல்லை சிவமணி புலவர் சிவசம்பு எம். ஏ.,
இயக்குநர்
ஸ்ரீ குமரகுருபரர் ஆய்வு மையம், நெல்லை-2

ஸ்ரீ குமரகுருபரர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர். சிவானந்த முனிவர். அவர் பாடிய பாடல்கள் தேனும் இன்னமுதமாய் தித்திப்பன. அப்பாடல்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளும் செய்திகள் வியப்பூட்டுவன. குமரகுருபரர் அறநெறியாளர். பொருளியல் புலவர். விலங்கியல் நிபுணர் தாவர இயல்மேதை. கல்வித்துறை ஆசான். அறிவியல் அறிஞர் கைரேகைக் கலைஞர் இப்படிப் பல கோணங்களில் சிந்திக்க அவரது பிரபந்தத் திரட்டு வாய்ப்புத் தருகிறது. இக்கட்டுரையில் அவர் கூறும் மருத்துவக் கருத்துக்களைக் காண்போம்.

மருந்தும் அவற்றின் குணமும், அறுவை சிகிச்சை, மருந்து கொடுக்கும் முறை, மருந்து சாப்பிடும் பொழுது நோயாளியின் செயல்கள், மருந்தை விரும்பிச் சாப்பிட்டாலும் விரும்பாது சாப்பிட்டாலும் அதன் பயனைத் தந்தே தீரும் என்பதும். இப்படிப் பல கருத்துக்களை நாம் அறிந்து மகிழ முடியும்.

வெங்காரமும் சிங்கியும்:

வெங்காரம் நோய் தீர்க்கும். அது வெப்பமுடையது. தீயினைப் போல் சுடும் தன்மையுடையது. இவ்வளவு கடுமையானது என்றாலும் நோய்களைக் குணப்படுத்தும்.

சிங்கி: இது ஒருவகை நஞ்சு. மிகவும் குளிர்ச்சி உடையது. அதை உண்டால் உடல் குளிரும். அது குளிர்ச்சியைக் கொடுத்தாலும் உடலைக் கொன்று விடும்.

இக்கருத்துக்களை நீதிநெறி விளக்கத்தில்

"அனல் கொளுத்தும் வெங்காரம்
வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொல்லும்"

என்று கூறுகிறார்.

அறுவைச் சிகிச்சை:

உடலில் ஒரு கட்டி ஏற்படின் அந்தக் கத்தியால் அறுத்து அப்புண்ணை ஆறச் செய்வார்கள். இக்கருத்தை நீதிநெறி விளக்கம் 56-ஆம் பாடலில்

"கருவி இட்டு ஆற்றுவார் புண்"

என்று கூறுகிறார்.

சில கட்டிகளை அறுத்தும் சில பகுதிகளைச் சுட்டும், பெரும் புண்ணில் மருந்து தோய்ந்த துணிகளை உள்ளே செலுத்தியும் புண்ணை ஆற்றுவர்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன் போல்" என்பது குலசேகர ஆழ்வார் கூற்று.

இக்கருத்தைத் தலைவி காதல் நோயால் வருந்தும் நிலையில் ஏற்பட்ட அனுபவமாக மதுரைக் கலம்பகம் 35-ஆம் பாடலில் கூறுகிறார்.

மன்மதன் எய்த அம்பு மார்பில் புண்ணை உண்டாக்கியது அப்புண்ணில் நிலவு என்ற தீப்புகுந்து வருத்துகிறதாம்.

மருத்துவ முறைப்படி மன்மதன் எய்த அம்பால் ஏற்பட்ட புண்ணில், நிலவு தன் ஒளியாகிய காரத்துணியை நுழைத்தும் புண் ஆறாமல் துன்பம் தருகிறது. எனத் தலைவி கூற்றாகக் கூறுகிறார்.

கணைமதன் வழங்க அவைபோய்
உருவிய பசும்புணில் வெண் நிலவு
அனல் கொளுத்தியது எம்
உயிர் சிறிது இருந்தது அரிதே

–ம. க. 35

மருந்து கொடுக்கும் முறை:

நோய் குணமாவதற்குமுன் இடையில் மருந்து சாப்பிடுவதை நிறுத்தக் கூடாது.

ஒருவர் இறக்கும் நிலையில் இருக்கிறார். அவர் வாயில் ஒருவர் மருந்து ஊற்றுகிறார் இந்நிலையில் இனி மருந்து வேண்டாம் என்கின்றனர் சிலர்.

அங்கிருந்த பெரியவர் ஒருவர் இறக்கும் நிலையில் இருக்கும் ஓர் உயிர்க்கு வாழ்நாளை நீடிக்கச் செய்யும் மருந்தை வாயில் ஊற்றுதல் குற்றமன்று. அம்மருந்து ஒரோ வழி நன்மை பயத்தலும் கூடும் என்கிறார்.

இக்கருத்தை நீதிநெறி விளக்கம் 49-ஆம் பாடலில்

''இறும் உயிர்க்கு ஆயுள் மருந்தொழுக்கல்
தீதன்றால் அல்லனபோல் ஆவனவும் உண்டு சில''

என்று கூறுகிறார்.

மருந்து உண்பவன் செயல்கள்:

சிலர் நோய் நீங்க மருந்து சாப்பிடுவதை வெறுக்காமல் மனம் மகிழ்ந்து சாப்பிடுவர்.

சிலர் அருவருத்து முகத்தைச் சுளித்துத்தலையை ஆட்டி அழுது அரற்றிச் சாப்பிடுவர்.

ஒருவன் மருந்தை விரும்பிச் சாப்பிட்டாலும் விரும்பாது சாப்பிட்டாலும் அது தன் பயனைக் கொடுத்தே தீரும்.

இக்கருத்தைச் சிதம்பர மும்மணிக்கோவை 2-ஆம் பாடலில் கூறுகிறார்.

"மருந்துஉண் வேட்கையன் மனமகிழ்ந்து உண்ணினும்
அருந்துழி ஒருவன் அருவருப் புறீஇத்
தன்முகம் சுளித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகும் ஆயின் அம்மருந்து இருவருக்கும்
தீப்பிணி மாற்றுதல் திண்ணமே"

-சி. மு. கோ. 2

இப்படிப் பல கருத்து முத்துக்கள் அவர்கள் கவிதைக் கடலில் குவிந்து கிடக்கின்றன நாமும் கவிதைக் கடலில் மூழ்கி முத்துக் குளிப்போம்.

(21—7—91 ஞாயிறு ஸ்ரீ குமரகுருபரர் ஆய்வு மையத்தில் ஆற்றிய உரை).

உ

சிவ சிவ

தில்லையில் ஆடிச் சுவாதி
இன்னிசைத் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள்

அருளாணையின் வண்ணம்

நிகழும் பிரஜோத்பத்தி ஆண்டு ஆடி மாதம் 31ஆம் நாள் (16—8—91) வெள்ளிக்கிழமை ஆடிச்சுவாதி அன்று சிதம்பரத்தில் திருமுறை இன்னிசை விழா நடைபெறும்.

திருமுறைவாணர்கள்:

1. சங்கீதபூஷணம். கலைமாமணி, தருமபுரம்.
   திரு பி. சுவாமிநாத முதலியார், சென்னை.
2. திருமுறைக்கலாநிதி, தேவார இன்னிசை வேந்தர், தமிழ்மறை இசைமாமணி, திருவாவடுதுறை,
   திரு து. சோமசுந்தர தேசிகர், சிதம்பரம்.
3. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்,
   திரு டி. எம். விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்,
   திருவாவடுதுறை.
4. தேவார இசை அரசு, கலைமாமணி, திருமுறைக் கலாநிதி,
   தேவார இசைமணி, திருப்பனந்தாள்,
   திரு எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர்,
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.
5. குடந்தை வி. லெட்சுமணன், சென்னை.
6. இன்னிசைமாமணி திரு எஸ். திருஞானசம்பந்தம்,
   தருமை ஆதீனம் கட்டளை ஓதுவார், சீர்காழி.
7. தருமபுரம் திரு எஸ். ஞானப்பிரகாசம்,
   தமிழ்த்துறை இசைப் பேராசிரியர், அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம்.
8. தேவார இசைமணி திரு என். சுவாமிநாதன், திருத்தணி.
9. திரு எஸ். ஏ. கோபாலன், சிதம்பரம்—வேய்ங்குழல்.
10. திரு ஆர். சிவப்பிரகாசம். சென்னை—பிடில்.
11. திரு கோ. வெங்கட்ராமன், திருப்பனந்தாள்—மிருதங்கம்.
12. திரு எம். ஆர். மாரியப்பன் தில்லையாடி—மிருதங்கம்.
13. T. கிருபாநிதி, கீழ்புவனகிரி—முகர்சிங்.

அருளாணையின் வண்ணம்

ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான்

காறுபாறு, ஸ்ரீ காசிமடம்.

திருப்பனந்தாள்

7—8—91

உ

மதுரையில்

பெரியபுராணச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

"கயிலைமாமுனிவர்"

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

நிகழும் பிரஜோத்பத்தி ஆண்டு ஆடிமாதம் 27-ஆம் நாள் திங்கட்கிழமை முதல் ஆவணி மாதம் 4-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முடிய (12—8—91 முதல் 20—8—91 முடிய) ஒன்பது நாட்கள் பெரியபுராணச்சொற்பொழிவுகள் நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் மதுரையில் 397 வடக்கு மாசி வீதி ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நாள் தோறும் மாலை மணி 7-00 முதல் 8-30 வரை நடைபெறும். அன்பர்கள் கேட்டு இன்புறுவார்களாக.

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
16—7—91

ஆணைப்படி,
ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான்
காறுபாறு.

நிகழ்ச்சி நிரல்

நாள்	சொற்பொழிவாளர்	பொருள்
12—8—91	சித்தாந்த வித்தகர் தி. சு. கோவிந்தசாமி	திருமலைச் சருக்கம்
13—8—91	திருநெறிய தமிழ்மணி, புலவர் தா. குருசாமி தேசிகர்	தில்லைவாழ் அந்தணர் சருக்கம்
14—8—91	சிவநெறிச் செம்மல், புலவர் நீ. சீ. சுந்தரராமன்	இலைமலிந்த சருக்கம்
15—8—91	சிவநெறிச் செல்வி த. பத்மாவதி	மும்மையால் உலகாண்ட சருக்கம்
16—8—91	புலவர் யாழ் சுந்தரம்	திருநின்ற சருக்கம்
17—8—91	கவிஞர் ஆ. ஆனந்தராசன்	திருஞானசம்பந்தர் புராணம்
18—8—91	புலவர் அ. மணிவாசகம்	ஏயர் கோன் முதல் சோமாசிமாறர் முடிய
19—8—91	சிரோன்மணி திரு. சூட்சமபுரீஸ்வரன்	வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் முதல் கறைக் கண்டன் சருக்கம் முடிய
20—8—91	புலவர் மணி சுப. இராமச்சந்திரன்	கடல் சூழ்ந்த சருக்கம் முதல் மன்னியசீர்ச் சருக்கம் வரை.

‘வாழ்வார்க்குச் சொல்’

பனசை சுவாமிநாதன், எம். ஏ., பி. எட்.,

காதல் வாழ்க்கையில் புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் எனும் ஐவகை ஒழுக்க நிலைகள் உண்டு. இருப்பினும் அவற்றுள் ‘பிரிவு’ எனும் நிலையே இலக்கிய உலகிலும், இலக்கண நூல்களிலும் விரிவாகப் பேசப் பெறுகின்றது.

வாழ்வியல் வசதியைக் கருதியும், பணி நிமித்தமும் ஆடவர் மகளிரை விட்டுப் பிரிய வேண்டிய கட்டாயச்சூழ்நிலை ஏற்படும். தூதிற் பிரிவு, துணை வயிற் பிரிவு, ஓதற் பிரிவு போன்ற பிரிவு வகைகளை இலக்கணங்கள் மிகவும் பரவலாகக் கூறுகின்றன அக்காலத்தில் அருகாமையில் கல்விச் சாலைகளும், வணிக மையங்களும் இல்லை. அரசனிடம் பணிபுரிவோர் தூதராகவும், படைத் துணையாகவும் பல நூறு காதங்கள் செல்ல வேண்டும். இன்றுபோல் அப்போது போக்குவரத்து வசதிகள் கிடையாது. தொலைபேசி, தொலைவரி போன்ற. தொலைத் தொடர்புச் (Telecommunication) சாதனங்கள் இல்லை. எனவே பிரிவு நேர்ந்தால் மீண்டும் சந்திக்கும் வரையில் தொடர்புக்கு வழியே கிடையாது. அதனால் தலைவனும் தலைவியும் பிரிந்திருக்கையில் அவர்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு அளவேயில்லை. இதைத் தமிழ் நூல்கள் பலபடப் பேசும்.

தலைவன் பணிநிமித்தம் பிரிய வேண்டிய சூழ்நிலை. தவிர்க்க இயலாது. அரசு ஆணை மீறினல் கடும் தண்டனை அனுபவிக்க வேண்டும். பொருள் ஈட்டாவிடில் சமுதாயத்தில் அந்தஸ்து இருக்காது. இச்சூழலில் தன் பணியைக் குறிப்பிட்டுத் தான் பிரிய வேண்டிய நிலைமையைக் கோடிட்டுக் காட்டுகிருன் தலைவன். வந்ததே கோபம் தலைவிக்கு; “சேர்ந்து வாழும் செய்தியாயின் என்னிடம் கூறு. பிரிவை என்னிடம் சொல்லாதே. நீ பிரிந்து சென்று மீள்கையில் யார் உயிரோடு இருக்கிருர்களோ அவர் களிடம் சொல்” என்று சினந்து மொழிகிருள். அதாவது நீ பிரியின் நான் உயிர் தரியேன். நீ வரும்போது நான் இருக்க மாட்டேன் என குறிப்பாக உரைக்கிருள். இச்செய்தியை முகந்து நிற்கும் அரிய குறள்:

செல்லாமை உண்டேல் எனக்குரை: மற்றுநின்
வல்வரவு ‘வாழ்வார்க் குரை’

வேள்வி வழிபாடு

முனைவர் அரு. மருததுரை, விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

நெருப்பினைப் போற்றி வணங்கிய நிலையினையடுத்து நெருப்பின் வழியாக இறைவனுக்குரியவற்றை அளிக்கின்ற வழிபாடு தோன்றியது. இதனை வேள்வி வழிபாடு என்பர், இவ்வழிபாடு காலப் பழமை மிக்கது. வேள்வி பற்றிய குறிப்புகள் மிகப் பழங்கால இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. வானவர்க்கும் தெய்வங்களுக்கும் நன்றி செலுத்துவது வேள்வியின் வழியாகவே அமைந்தது. அவ்வத்தெய்வங்களுக்குப் படைப்பனவற்றைத் தீ வளர்த்து அதில் இட்டனர். பொதுவாக இவ்வழிபாடு பரவலாகப் பேசப்பெற்றாலும் சைவ சமயத்திலும் எரியோம்பும் வழக்கமிருந்ததனைத் தேவாரப் பாசுரங்களும் சிறப்பாகப் பேசுகின்றன.

தேவாரம் காட்டும் வேள்வி வழிபாடு:

வைதீகச் சமயநெறியில் வேள்வித்தலைவனாகச் சிவபெருமான் கருதப் பெறுகிறான். அவனை வேள்வி முதல்வன் என்று சங்க இலக்கியம் (பரி 5:31) எடுத்தியம்பும். சிவபெருமானை வேள்வியின் வழியாக வழிபாடு செய்கின்ற நிலையை வேதம் குறிக்கிறது. சங்க காலத்தில் வேள்வி வழிபாடு குறிப்பிடப்பெற்றாலும் அது சிவ வழிபாடாகப் பிரித்துக் காட்டப்பெறவில்லை. மூவர் முதலிகள் காலத்தில் வேள்வி வழிபாடு சிவவழிபாடாக விரிவான வளர்ச்சியைப் பெற்று விட்டதைத் தேவாரப் பாசுரங்களின் வாயிலாகச் சுட்டிக் காட்டவியலும், வேள்வி வழிபாட்டை அந்தணர் செய்யும் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகத் தேவாரம் குறிப்பிட்டுள்ளது.

வேள்வியைச் செய்தவர்கள்:

அந்தணர்கள் (2-. 170. 4), மறையவர் (6:75. 4), வேதியர் (3. 328. 1), நல்லினத்தார் (3. 267. 2) மாதவர் (3. 320. 3) என்றவாறு வேள்வி வழிபாடு செய்த அந்தணர்களைத் தேவாரம் சுட்டுகிறது.

வேள்வி நடைபெற்ற இடங்கள்:

அக்காலத்தே வேள்வியைச்செய்து சிவபெருமானை வழிபட்ட தலங்களாகத் தேவாரம் விழிமிழலை (1. 32. 9) கொச்சைவயம் (2. 219. 5), தில்லை (1. 80. 2), கோகரணம் (3. 337. 8), திருவேட்களம் (1. 39. 3), திருவெண்காடு (2. 197. 7), பாம்புரம் (1. 41. 5), திருவாஞ்சியம் (5. 67. 2), கலயநல்லூர் (7. 16. 4), முதுகுன்றம் (7. 43. 3), நனிபள்ளி (7. 97. 7) ஆகிய இடங்களைக் குறித்துள்ளது.

வேள்வியில் பயன்படுத்தப் பெற்ற பொருள்கள்:

எரியோம்பி அதன் வழியாக இறைவனுக்கு அருதியளிக்கும் வேள்வி வழிபாட்டில் அகில் (2. 170. 7), அவிகள் (3. 283. 4) நெல் (2. 132. 9), சமிதை (2. 132. 9) முதலிய பொருள்கள் பயன் படுத்தப் பெற்றன.

வேள்வி வகைகள்:

வேள்வி ஐந்து வகைப்படும் என நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் நவின்றுள்ளனர். ஐவகை வேள்வி, ஐவேள்வி (1. 43. 2) என்று குறித்துள்ளனர். கடவுள் வேள்வி, பிரம வேள்வி பூத வேள்வி, மானிட வேள்வி, தென்பலத்தார் வேள்வி ஆகிய இவையே ஐவகை வேள்வி என்பார் வ. சு. செங்கல்வராயபிள்ளை (தேவார ஒளிநெறி அப்பர் (2) ப 422)

வேள்வி வழிபாடு விளக்கம்:

இறைவனுக்குச் செலுத்த வேண்டியவற்றை வேள்வித் தீயில் இட்டால் அவை இறைவனைச் சென்றடையும் என்ற கொள்கையால் அந்தணர்கள் மறைவல்லார்கள் வேள்வியினைச் செய்து அதில் இறைவனுக்குரிய அவியைக் கொடுத்து வணங்குவர்.

வேள்விகள் எழில்மிக்க பொழில்களில் செய்யப்பெற்றன. புல்லைப் பரப்பி நெல், சமிதை, அகில் இவற்றை எரியில்விட்டு ஏழு சுரங்களுடன் ஓதுவர். அவர்களது வேள்வியினால் ஊரில் யாதொரு தீங்கும் வாராது. அவ்வேள்விப் புகையினால் மழை பெய்யும் என்பர். காலையிலும் மாலையிலும் பசுவின் நெய்கொண்டு அந்தணர் வெந்தழல் உருவனும் சிவனை வேள்வி செய்து வழி

படுவர் என்று தேவாரம் வேள்வி வழிபாட்டை விளக்குகிறது. இதனைக் கீழ்க்காணும் அடிகள் விவரிக்கின்றன.

'எரி மூன்று தழலோம்பும் சீலமுடையார்கள்' (3. 341. 9)
புத்தியினால் மறைவழியே புற்பரப்பி நெய்சமிதை கையிற் கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிக அளிப்போர் (1. 132. 9)
மறையின் ஒல்லொலி யோவா மந்திரவேள்வி யறாத
குறைவி லந்தணர் (3. 325. 1)
வேதம் போற்றும் பூசுரர்கள் புரிந்தவர் நலங்கொள்
ஆகுதியினால் நிறைந்த விரைமலி
தூபம் விசும்பினை மறைக்கும் (1. 75. 6)

என்ற ஞானசம்பந்தர் குறிப்புகளும்,

மிக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழிய (6. 75. 4)
அந்தியோ டுதயம் அந்தணாளர் ஆனெய்யால்
வேட்கும் வெந்தழலுருவர் (4. 64. 7)
ஒளிசிறந்த வேதியர்......வேள்வி ஆவன ஐயாறன்
அடித்தலமே (4. 92. 1)

என்ற நாவுக்கரசர் குறிப்புகளும்

அங்கமோ டாறவையும் அருமாமறை வேள்விகளும்
எங்குமிகும் அந்தணர் எரிமூன்றவை ஓம்புமிடம் (7. 97. 7)
இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்பர் எங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்கு நகர் (7. 40. 5)

என்று சுந்தரர் குறிப்பிட்டுள்ள குறிப்புகளும் வேள்வியை விளக்குவதாகின்றன.

வேள்வியில் வெந்தழலுருவாக 'விளங்கும் சிவபெருமான் வேள்வியாகி வேள்வியின் பயனுமாகவும் திகழ்கிறார் எனத் தேவாரம் பாடுகிறது.

வேள்வி வழிபாட்டைக் குறிக்கும் தேவாரப் பாசுரங்கள் வேள்விக்கு முதன்மையான வேதமும், ஆறங்கமும் சிவபெருமானே என்பதையும் குறிப்பிடுகின்றன.

வேதியன் (1. 107. 10), அரங்கன் (3. 377. 3), இருக்கின் மலிந்த இறைவர் (1. 24. 10), சாமநல்வேதன் (1. 50. 2), நான்

மறையாளர் (1. 41. 1), வேத முதல்வன் (1. 32. 4), வேதன் (2. 149. 3) என்று வேதம்,மறை,ஆகமங்களுக்குள்ள தொடர்பினை இறைவனுடன் ஏற்றியுள்ளார் ஞானசம்பந்தர்.

ஆறங்கம் நால்வேதமானாய் (6. 55. 1), எண்ணுடை இருக்குமாகி (4. 48. 3) ஓதியவேதானவர் (4. 49. 1), சுருதியான் (6. 74. 1), வேதத்தர் (5. 24. 9), வேதநாதன் (5. 57. 7), அருமறையோடாறாங்கமானவர் (6. 93. 6) என்பர் நாவுக்கரசர்.

ஆரணன் (7. 97. 6),சாமவேதன் (7. 68. 1), நான் மறையினர் (7. 98. 4), வேதமுதல்வர் (7. 33. 5), மறைப்பொருள் (7. 80. 9) என்று சுந்தரர் போற்றியுள்ளார்.

இறைவனை வேள்வி நாயகன் (4. 64. 1), வேள்வியுளான் (5. 11. 9), வேள்வியை வேட்க வைத்தார் (4. 30. 2), வேதங்கள் வேள்வி பயந்தார் (5. 16. 3), வேதவேள்விசொல்லனே (6.48.1) எனவும் நாவுக்கரசர் வேள்வியின் நாயகனாந் தன்மையினைக் குறித்துள்ளமை நினைவு கூரத்தக்கது.

சிவபெருமானே வேள்விநாயகனாக விளங்குவதாகவும் வேள்வியை விரும்புவனாகவும் மூவர் முதலிகள் பாடியிருப்பது சிந்தனைக்குரியதாகும். சிவவழிபாட்டு முறைகளில் வேள்வி வழிபாட்டிற்குச் சிறப்பளித்துள்ளனர் என்பது பெறப்படுகிறது. மேலும் வேள்வி செய்தற்கு இறைவனிடம் பொன் வேண்டிப் பெற்ற வரலாறும் வேள்விவழிபாட்டின் சிறப்பினைப் புலப்படுத்துகிறது எனலாம்.

முடிவுரை:

எளிய வழிபாட்டு முறைகளை மிகுதியும் வலியுறுத்திய மூவர் முதலிகள் அன்றை நாளில் வழக்கிலிருந்த வேள்வி வழிபாட்டினையும் தங்களது பாடல்களில் பதிவு செய்துள்ளனர். எரியினை வளர்த்து அதனை வணங்கிய மரபு தொடர்ச்சியான காலப்பழமையைச் சுட்டுகிறது. சிவ வழிபாட்டிலும் இவ்வழிபாடு அக்காலத்தே ஒரு பிரிவினரால் சிறப்பாகப் பேணப்பெற்றது என்பது மூவர் முதலிகள் வாக்கால் அறியலாகிறது.

ஸ்ரீ கபில மாமுனிவர் அருளுரை-1

1977-ம் ஆண்டு ஜூலை மாதம் திருப்பனந்தாளில் சைவர்கள் சங்கம் அமைக்கப் பெற்றபின், சைவ அன்பர்கள் ஸ்ரீ காசி மடத்திற்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களைத் தெரிசித்து ஆசிவேண்டிய போது, ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் வழங்கிய அருளுரை:

"முற்காலத்தில் தமிழ் மொழியை வளர்க்க மூன்று சங்கங்கள் நம் நாட்டில் இருந்ததாக வரலாறு கூறும். ஆனால் இக்காலத்தில் சாதி பற்றியும், தொழில் பற்றியும் பல சங்கங்கள் பெருகி வருகின்றன. ஆசிரியர்கள், அலுவலர்கள், தொழிலாளர்கள் இறைவனை வழிபடுவோர் ஆகிய பலதிறப்பட்டவர்களும் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளனர் காரணம் என்னவென்றால் தனி மனிதனாக அன்றி, கூட்டாகச் சேர்ந்து ஓர் இலக்கினை அடைதல் எளிது என்பதே. ஏன்? இறைவனை வழிபடுவோர்க்கூட்டமும் சேர்ந்து "சிவனடியார் திருக்கூட்டம்" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இன்று நீங்கள் "சைவர்கள் சங்கம்" என்ற அமைப்பில் ஒன்று கூடியுள்ளீர்கள். உங்கள் சங்கம் நல்ல குறிக்கோளுடன் விளங்க வேண்டும். இறை வழிபாடு இன்றியமையாதது. அத்துடன் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவற்றையும் நீங்கள் மறந்து விடக்கூடாது.

முதலில் நீங்கள் ஒற்றுமையுடன், சகோதர நேயத்துடன் வாழ முற்பட வேண்டும். உங்கள் அமைப்பில் இளைஞர்களுக்கென ஒரு பிரிவினை ஏற்படுத்த வேண்டும். எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள் இளைஞர்களே ஆவர். உங்கள் குடும்பத்தவர் அனைவரும் தெய்வபக்தியுடையவர்களாக விளங்கவேண்டும். தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டில் பெரியவர் முதல் சிறுவர் ஈறாக அனைவரும் கூட்டாக இறை வழிபாடு செய்யவேண்டும். தேவார, திருவாசக நூல்களை ஓதி, இளைஞர்கள் பண்பாடச் செய்யுமாறு ஊக்கம் தரவேண்டும். நாம் பலவுர்களுக்கும்

பயணம் செய்யும்போது, பல வீடுகளில் குறிப்பாக சைவர்களது வீடுகளில் திருவிளக்கு ஏற்றும் வழக்கம் குறைந்து வருவதைப் பார்த்து வருகிறோம். அவ்வாறன்றி தினமும் திருவிளக்கிடுதல் வேண்டும். ''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்'' என்பது திருமுறை. தினமும் விளக்கிட இயலாவிடின் வெள்ளி, செவ்வாய் இருதினங்களிலாவது மறவாது திருவிளக் கேற்ற வேண்டும். இளமைப் பருவத்திலேயே இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் இப்பழக்கத்தை ஏற்படுத்தி விட்டால் அது தொடர்ந்து வாழ்க்கை முழுவதும் பயன்படும். அனைவரும் தினமும் திருநீறு அணிதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் உங்கள் சங்கக் கூட்டத்தில் சொற்பெருக்குகள், வினாடி வினா நிகழ்ச்சிகள், கலந்துரையாடல் ஆகியவை இடம் பெறவேண்டும். உங்கள் வீடுகளில் நடை பெறும் திருமணம், இதர நிகழ்ச்சிகளில் நீங்கள் அனைவரும் பங்கு கொண்டு துணைபுரிய வேண்டும். இவை தவிர ஆண்டிற்கு ஒரு முறையாவது நீங்கள் அனைவரும் அருகில் உள்ள ஆலயங் கட்குச்சென்று உழவாரப்பணி புரிதல் வேண்டும்''.

அருளுரை-2

1986-ம் ஆண்டு சென்னைப் பிரமுகர் ஒருவர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திற்கு வந்து,ஸ்ரீல ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களை தெரிசித்து, தனது பெண்ணிற்கு 36 வயது ஆகியும் இதுவரை திருமணம் நடைபெறவில்லை என்றும், அதனால் திருமணஞ்சேரி முதலான பல தலங்களிலும் வழிபாடு செய்து வருவதாகவும் தெரிவித்தபோது, ஸ்ரீ கயிலைமாமுனிவர் அவர்கள் வழங்கிய அருளுரை:

''திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பெறுவது என்று சொல்வார்கள். ''வடகடலிட்ட ஒருநுகத் தொருதுளை, தென் கடலிட்ட கழி சென்று கோர்த்தாற்போல தலைவனும் தலைவியும் முற்பிறவிப் பயனால் ஒன்று சேர்ந்து திருமணம் செய்யப் பெறுவர் என்று பழந்தமிழ் நூலாகிய இறையனார் களவியல் கூறும். எனவே திருமணம் நடைபெறும் வேளை வந்து விட்டால் அது நடந்தே தீரும். ஏன்? பதினைந்து, பதினாறு வயதில் கூட சிலருக்கு திருமணம் நடந்து விடும்.எனவே இதற்காக முயற்சி செய்யாமல் சும்மா இருத்தல் கூடாது. பலதலங்களையும் வழிபட வேண்டும். ஜாதகத்தைத் தக்கவர் மூலம் ஆராய்ந்தறிந்து, அதில் தோஷம் இருப்பின் அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்ய வேண்டும்''.

பொன். முருகையன்.

நூல் நிறை

பனசைக் குயில் கூவுகிறது:

(ஆக்கியோன்:- மு. இளங்கோவன் பி. லிட்.,பக்கம் (4+11) 15; விலை ரூ. 2-50; வெளியீடு: பஃறுளிப் பதிப்பகம், இடைக்கட்டு, உள்கோட்டை-612 901 கங்கை கொண்ட சோழபுரம் (வழி)]

'புகழ்கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு'- என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளாலும், 'ஆன்ற பொருள் தந்து'- என்று கம்பநாடனாலும் கவிமாண்பு தெரிந்துரைக்கப்படும்.

உரை நடைக்கு இல்லாத உயர் அழகு கவிக்கு உண்டு; பாட்டும் உரையும் பயின்று வருவதாயினும் உரையினும், பாட்டிற்கே கற்பாரைச் சுண்டியிழுக்கும் திறன் உண்டு.

அகத்துறைப் பொருள் பாடுபொருளாக, செந்தமிழ்ச் சொற்களைச் சேர்த்தெடுத்துக் கோத்தளித்துள்ளார். அழகான இனிய ஓசை கொண்ட பாடல்களும், பொருந்திய சொற்கோவைகளும், ஆங்காங்கு மிளிரும் அணிநயங்களும் நூலின் அழகுக்கு அழகு செய்கின்றன.

குளிர்காய......கால்நீட்டி......(பாடல்-1)

கரும்புகளும் வாழைகளும் காதல்கதை பேசிடவே (7)

விரலாலே அளந்திட்டு (18)

எனும் பேச்சுத் தமிழ்ச் சொற்கள் இலக்கிய மெருகேற்றிப் பாடப் பட்டுள்ளன.

இரு பொருள்படும் பாடலும்-சிலேடை-(28) உண்டு.

இயற்கையை ஆழ்ந்து அனுபவிக்கும் திறன் கவிஞர்க்கே உண்டு; அது இவரிடத்தும் செறிந்துள்ளது.

'முன்தானை'-என்ற சொல்லை 'முனைப்புடவை' (23) எனக் குறிக்கும் ஆட்சி புதியது. பொருந்தியதே.

பயிலும் போது படைப்பாற்றல் இயைவோர் சிலரே. அதனை முறைப்படி வெளிப்படுத்துவோர்மிகவும்சிலரே. இளங்கவிஞரைப் பாராட்டி, மேலும் வளர 'வாழ்த்துகிறது ஸ்ரீ குமரகுருபரர்.

தமிழ் வேதத் திரட்டு:

[தொகுத்தோர்:- சிவ. ஆ. பக்தவச்சலம், எம். ஏ., எம். எட்., பி. ஜி. டி. எச். ஈ., பக்கம்:160; விலை ரூ. 25/ சலுகை விலை ரூ. 10/ கிடைக்குமிடம்: ஆ. பக்தவச்சலம், சிவனடியார் திருக்கூட்டம், 43, சன்னதி வீதி, நல்லூர்ப்பேட்டை, குடியேற்றம்-632 602]

'எழுதாக் கிளவி'-எனச் சுட்டப் பெறுவன வேதங்கள். எழுதப்பட்ட தமிழ் வேதங்களே திருமுறை நூல்கள். சைவ உலகம் பெற்ற அளவில்லாத, அற்புதக் கருவூலங்கள் திருமுறைகளே.

தமிழ்வேதங்கள்-திருமுறைகள்-காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்க்கு வளங்கூட்டும்; திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்,நோய் நீக்கும்; இவை பொதுவான பதிகப்பயன்கள். இவையேயன்றி இன்னின்ன பதிகங்களை ஓதினால் இன்னின்ன பயன்கள் கிட்டுமென்பதை அருளாளர்கள் தாங்கள் ஓதி, பயனைச் செய்து காட்டி வரலாறாக்கிச் சென்றுள்ளனர்.

நோய்கள் நீங்க (பக். 32, 48, 58, 88)
வழக்கில்வெல்ல,தொழில்,வியாபாரம்,விவசாயம் பெருக(44)
மகப்பேறு இனிதே நிகழ (பக். 45)
தடைப்பட்ட திருமணம் கைகூட (பக். 52)
மகப்பேறு வாய்க்க (54)
நவக்கிரக தோஷம் நீங்க (62)
'பொருள்' பெற (68)
மனக்கவலை மாற்ற (76)

என்பன போன்ற தலைப்புகளில் குறிப்பிட்ட பதிகங்கள். அவை தொடர்பான பதிகப்பயன் ஆகியவை ஆங்காங்கு விளக்கப் பெற்றுள்ளன.

முற்பகுதியில் சிவாலய வழிபாட்டு முறைமை, பதிகம் ஓதும் முறைமை, சிவராத்திரி,பிரதோஷ வழிபாட்டுச் சிறப்புகள் சுட்டப் பெற்றுள்ளன.

பாராயணம் செய்ய உதவும் நூல்களில் பிழைகள் இருக்கக் கூடாது. யாதுகாரணம் பற்றியோ அவை மிகுந்துள்ளன. 'பிழையுளன பொறுப்பர்' ஆகும் பெருமானின் புகழ்பாடும் வேதம் அல்லவா ஈது?

பனசை சுவாமிநாதன்

ஓம் என்னும் பிரணவம்

சிவபூசை ஆர். பி. சாமி
புன்செய்ப்புளியம்பட்டி-638 459

பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் நித்தமாய் சடமாய் முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய் முதல்வனின் வியாப்பியமாய் அருவாயுள்ளதெனப்படும் மாயை, சுத்தமாயை அசுத்தமாயையென்று இருவகைப்படும். சுத்தம் அசுத்தமென்பன யாவையெனின் துன்பத்தோடு விரவுதலின்றி இன்பமாத்திரையே பயத்தற்கேதுவாயது சுத்தம். ஏனையது அசுத்தம். மாயையொன்றே குன்றுமணி முதலியன போல மலகன்மத்தின் விரவாதபாகத்தின் சுத்தமும், அவற்றோடு விரவியபாகத்தின் அசுத்தமுமென்று இரண்டு தன்மையுடைத்தாய்க் கன்மமொன்றே சுத்த கன்மம் அசுத்த கன்மம் என்று இருவகைப்பட்டவாறு போலப் பயத்தல் விசேடத்தானும் அறிவித்தல் விசேடத்தானுஞ் சுத்தமாயை அசுத்தமாயை என்று இருவகைப்பட்டு நிற்கும். சுத்தமாயையின் காரியஞ் சத்தப் பிரபஞ்சம், அத்தப்பிரபஞ்சமென்று அதாவது சொற் பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சமென்று இருவகைப்படும். சத்தப்பிரபஞ்சம் சூக்குமை முதலான நால்வகை வாக்குகளாகும். அசுத்தப் பிரபஞ்சம் சுத்ததத்துவம், கலையென இரு வகையாகும். அவற்றுள் சுத்தத்தத்துவம் சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தையென்று ஐந்து வகைப்படும். கலைகள் சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை நிவர்த்தியென்று ஐந்து வகைப்பட்டு நிற்கும். வாக்கு சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நால்வகைப்படும். வைகரியும் தன் செவிக்குக் கேட்குஞ் சூக்கும வைகரியும், பிறர் செவிக்குக் கேட்கும் தூல வைகரியும் என இருவகைப்படும். ஆகலின் வாக்கு ஐவகையாகும். இவ்வாக்குகள் ஒன்றுக்கொன்று காரணமாய்ச் சவிகற்பவுணர்விற்கேதுவாய்ச் சுத்தமாயையின் விருத்தியாய்ச் சாந்தியதீதை

முதலான பஞ்சகலைகளைப் பற்றி சிவதத்துவ முதலான சுத்த தத்துவங்களின் ஐவகைப்பட்டு நிற்கும். சூக்குமை சாந்தி யதீதைக்கலையைப் பற்றி நாதவடிவாயும், பைசந்தி சாந்திகலையைப் பற்றி விந்து வடிவாயும், மத்திமை வித்தியாகலையைப்பற்றி மகரவடிவாயும், சூக்குமவைகரி, பிரதிட்டாகலையைப் பற்றி உகரவடிவாயும் தூலவைகரி, நிவர்த்தி கலையைப்பற்றி அகரவடி வாயும் நிற்கும்.

சாந்தியதீதக்கலை நாபித்தானத்திலிருந்து எழுத்துக்களின் தோற்றத்திற்கு அதீதமான ஒலியைத் தோற்றுவிக்கும் எனவும் சாந்திகலை உந்தித்தானத்திலிருந்து எழுத்துக்களை அடக்கித் தோற்றுவிக்கும் எனவும், வித்தை கலை இருதயத்தானத்திலிருந்து சொல்லிற்குரிய எழுத்துக்களைப் பிரித்து அறிவிக்கும் எனவும், பிரதிட்டாகலை கண்டத்தானத்திலிருந்து சொல்லைத்தனக்குக் கேட்கும்படி நிலைக்கச் செய்யும் எனவும், நிவர்த்திகலை வாய் என்னும் தானத்திலிருந்து பிறருக்குத் தெரியவொட்டாத சொல்லின் நடையை நிவர்த்தித்துப் பிறருக்குத் தெரியும்படி சொல்லச் செய்யும் என்வும் அறிக.

சூக்குமை வாக்கு ரூபமாய் நிற்குஞ் சிவாகமத்திற்கு சிவதத்துவமிடமாயும், பைசந்தி வாக்கு ரூபமாய் நிற்குஞ் சிவா காமத்திற்கு சத்திதத்துவமிடமாயும், மத்திமை வாக்கு ரூபமாய் நிற்கும் சிவாகமத்திற்கும், அச்சிவாகமம் காமிக முதல் வாதுள மீருக இருபத்தெட்டாய்ப் பாகுபடுதற்குக் காரணமான பிரணவர் முதலியோருக்கும் சதாசிவதத்துவமேயிடமாயும், சூக்கும வைகரியுருவாய் நிற்கும் சிவாகமங்கட்கு ஈசுவரதத்துவமேயிட மாயும், தூலவைகரி ரூபமாய் நிற்கும் சிவாகம முதலிய சாத்திரங் களுக்கும், எழுகோடி மந்திரங்களுக்கும் சுத்தவித்தையேயிட மாயும் நிற்கும். அகரமுதலான இவ்வைந்துஅக்கரங்களும் அந்தக் கரணங்கள் நான்கினையும் உயிரையும் செலுத்தும். அதாவது அகரம் அகங்காரத்தையும், உகரம்புத்தியையும், மகரம் மனத்தினையும், விந்து சித்தத்தினையும், நாதம் உயிரினையும் செலுத்தித் தொழிற்படுத்தும். பிரமன் விட்டுணு, உருத்திரன்,

மகேசர், சதாசிவர் என்னும் ஐவரும் அகார முதலான அக்கரங்கள் ஐந்தின் அதிதெய்வங்களாவர். இவ்வைந்து அக்கரங்களும் உயிருக்கு உணர்வு தோற்றுவிக்கும் பிரணவமாகலான் கரணங்களை அக்கரமும், அக்கரங்களை அதிதெய்வங்களும், அதிதெய்வங்களை இறைவனும் இயக்கி நிற்பான்.

பஞ்சபூதங்கள் பரிணமப்பட்டு தநு, கரண, புவன போகங்களாக விளங்குவதற்கும் இப்பிரணவத்தின் செயற்பாடு இன்றியமையாததாகிறது. இப்பஞ்ச பூதங்கள் தோன்றி விளங்குவதற்கு மூல அக்கரங்கள் உண்டு. அவை "பீஜாட்சரங்கள்" எனப்படும். பிருதிவி தத்துவத்திற்கு "ல" வும், அப்பு தத்துவத்திற்கு "வ" வும், தேயு தத்துவத்திற்கு "ர" வும் வாயு தத்துவத்திற்கு "ய" வும் ஆகாய தத்துவத்திற்கு "ஹ" வும் வித்தெழுத்தாகும். இப்பீஜாட்சரங்களும், பிரணவமும் பஞ்சீகரணப்பட்டு பஞ்ச பூதங்கள் பிரபஞ்சமாகப் பரிணமப்பட வகை செய்கின்றன. உயிருக்கு உணர்வு உண்டாக்கும் அகார முதலான ஐந்தெழுத்துக்கும், நகார முதலான பஞ்சாக்கரத்திற்கும் உள்ள இயைபே அந்த உணர்வு சிவஞானமாக மாறுவதற்கான வழி செய்கின்றது என்பதாம்.

அகர, உகர, மகர, விந்து, நாதம் என்னும் இவ்வைந்து அக்கரங்களும் சூக்கும வடிவான விந்து நாதம் இரண்டும் உள்ளடங்கிய வரிவடிவான அகர, உகர, மகரமாய் 'ஓம்' என்னும் பிரணவமாய் நிற்கும் என்பதூஉம், இப்பிரணவமே "அசபை" யாக நின்று சுவாசத்தைப் போக்குவரவு புரியச் செய்து உயிரை உடலில் நிலைபெறச் செய்யும் என்பதூஉம், லகார முதலான, பஞ்ச பூதங்களின் பீஜாட்சரங்களுடன் பஞ்சீகரணப்பட்டு பிரபஞ்ச உற்பத்திக்கு ஏதுவாய் நிற்கும் என்பதூஉம், அந்தக்கரணங்களை உடன்நின்று செலுத்தி உயிருக்கு உணர்வு தோன்றச்செய்யும் என்பதூஉம், அந்த உணர்வே நகார முதலான பஞ்சாக்கரங்களை வழிப்படுத்துதலான் சிவஞானமாகமாறும் என்பதூஉம் மற்றும் பிறவுமாம்.

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

1) வயிற்று வலிக்கு:

உஷ்ணம் காரணமாக வரும் வயிற்று வலிக்கு வெந்தயம் ½ ஸ்பூன் எடுத்து வாயில் போட்டு நன்ருக மென்று விழுங்கி மோர் அல்லது இளநீர் பருக வயிற்றுவலி குணமாகும்.

2) வறட்டு இருமலுக்கு:

அதிமதுரம் ஒரு துண்டு வாயில் அடக்கி அந்த உமிழ் நீரை விழுங்கி வரலாம்.

.) வயிற்றுப்புண்:

அத்திக்காயை நன்கு அவித்து பிசைந்து பாசிப்பயிறு,சீரகம் பூண்டு நெய்சேர்த்து தாளிதம் செய்து சாப்பிட வயிற்றுப்புண் நோய் வராது. இரத்தமூல நோய்களும் குறைமாகும்.

4) பனிக்காலத்தில் தோல் வெடிப்பு:

இரவு படுப்பதற்கு முன் சுத்தமான தேங்காய் எண்ணெயில் பூங்கற்பூரம் 2 சிட்டிகை கலந்து தேய்க்கலாம். ஆலிவ் எண்ணெ தினசரி 5 முதல் 10 சொட்டு பாலில் கலந்து சாப்பிடலாம்.

5) தினசரி குளிக்கப் பயன்படுத்த:

கடலைப் பருப்பு ½ கிலோ சந்தனசக்கை 100 கிராம் பூவாலை கொட்டை 50 கிராம் சேர்த்து அரைத்து குளிப்பதற்கு ½ மணி நேரம் முன்னதாகத் தேய்த்துப் பின்னர் குளிக்க மேனி பொலிவு தரும்.

Dr. N. சடையப்பன், S. M. P.

அருணந்தி சிவாச்சாரியார் அருளிச்செய்யும்

இருபா விருபஃது

பூசை. சுப்பையாபிள்ளை, எம். ஏ., பி. எட்.,
படப்பை — 601 301.

...ஆரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா
தியமன் செய்திடி யிதற்கெனி னமைவும்
பின்னையின் ருகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையறீ ரியமற்கு வழக்கில்லை மன்ன
வொருவரே யம்மையு மொருவா வொருவற்
கிருவரும் வேண்டா விறைவனு நின்றனை
நின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கணை வின்று
முள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனுமுரை யதனுற்
கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையு
மீய வேண்டு மெனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளுஞ் சிவபெரு மானே.

ஆரணங்கு......என்னை:

அடியேற்கு என்பது ஆண்பால் குறிப்பது. கொல் அசை.

பிறப்புத் தொடர்ச்சிக்கு மக்கள் வழியன்றி மாற்றுவழி இல்லை. மக்கள் என்பார் ஆணென்றும், பெண்ணென்றும் இருவகையர் ஆவர். ஓர் ஆணிடம் மகள் வருவதற்கான ஏது யாது?

செயல்......வாராது:

ஒருவனது உடம்பிலுள்ள அணுக்களுள் முன்னைப் பிறவிகளி லின்றும் வந்த இருவினை தேங்கியுள்ளது. அதனோடு இந்தப் பிறவியில் ஈட்டும் வினை கூடி இனிவரும் பிறவிக்குக் காரண மாகிறது. இந்தப் பிறவியின் வினை, தானே இருவினையோடு கூடி மகளாய் வருமோ?

நினைவிற் கொள்க. பிறக்கவிருக்குங் குழவி ஆணா, பெண்ணா என்பது தந்தையிடமே அறுதியிடப்படுகிறது என்று தமிழ்க் கொள்கை மாத்திரமே தெளிவாகக் கூறுகிறது. அதனாலேயே, 'செயல் எனதாயினும்' என்கிறார்.

ஒருவனது செயல் அறம் என்றும், பாவம் என்றும் இருவகைப் படும். இருவினையோடு அறங்கூட ஆண் வித்து (Y அணு) உண்டாகும்; பாவங்கூடப் பெண்வித்து (X அணு) வரும். அறம்பாவங்களது விரிவை ஞானமிர்தத்து 24 ஆஞ் செய்யுளுட் காண்க.

இயமன்......மன்ன:

காலத்தை ஆள்பவன் காலன். அமைவு என்பது இனிவரும் உடம்பு, உம்மை, புடைபெயர்ச்சியை இழப்பதுமன்றி என இறந்தது தழீஇயது. மையல்தீர் வழக்கு இயமற்கு இல்லை என மாறுக.

ஆணவத்தை ஏற்காத சமயத்தாருட் சிலர், மண்முதற் காலம் ஈருகவுள்ள 31 தத்துவங்களையே கொள்வர். அவர், ஒருவன் தான் செய்த பாவத்தின் பயனாக எமன் கைப்பட்டுப் பெண்ணாப் பிறந்து தனது பாவத்திற்கான தண்டனையைப் பெறுவான் என்பர்.

தமிழ்க்கொள்கையில் காலன் கைப்பட்ட ஆன்மா, தனது புடைபெயர்ச்சியை (Mobility) இழக்கும். இழக்கவே அதற்குப் பிறிதோர் உடம்பு கிட்டாது.

ஒருவரே அமையும்:

ஏகாரம் தேற்றம். பெண்பிறப்பு நிரயம் என்றும், தந்தை செய்த பாவத்திற்கு எமனுல் தண்டனைபெறும் பிறப்பென்றும் பிறர் கொண்டதை எடுத்துக் கொண்டால், தண்டனை முடிந்ததும் அருள் கிட்டுவது யாரால்? எமனுல் எனின், அருளுந்தொழில் அவனதன்று. இறைவனுல் எனின், தண்டனை வழங்க ஒருவனும், அருள் வழங்க மற்றெருருவனும் என இருவர் எற்றிற்கு?

ஒரு ஆ ஒருவற்கு இருவரும் வேண்டா:

ஓர் ஆ எனற்பாலது ஒரு ஆ என நிற்கிறது. ஒருவாவொருவன் ஏகான்மா. தமிழ்க் கொள்கையில் ஆன்மா 'அவன்' எனப்படு மாதலால் ஆண்பாலாற் கூறுகிறுர்.

ஒருவனது உடம்பில் எத்தனை ஆன்மாக்கள் உள? எண்ணிறந்த ஆன்மாக்கள் உளவென்பது தமிழ்க் கொள்கை. அவற்றுள் இந்த உடம்பைச் சுமந்து இறையடி சேர்வது தமி எனப்படும். சில சமயங்கள் ஓர் உடம்பில் ஒரே ஓர் ஆன்மாவே உள்ளதென்றும், அது ப்ரஹ்மத்தின் வேறன்று என்றுங் கொண்டன. அவ்வாருயின், இறைவனுந் தேவையில்லை; காலனுந் தேவையில்லை.

இறைவனும் நின்றனை:

உம்மை காலனும் நின்றனன் என எதிரது தழீஇயது. தெளிவின் பொருட்டு இறந்த காலத்தாற் கூறுகிறுர்.

எல்லாம்வல்ல ப்ரஹ்மம் தனது பாவத்திற்காகக் காலனது கைப்பட்டுப் பெண்ணுகி நிரயந் துய்ப்பதும், இறுதியில் தன்னைத் தானே அருளுவதுஞ் சாலாது. ஆதலின், இரண்டு செய்கைகட்கும் இருவர் வேண்டப்படுவர்.

அமைத்தது...அமைவு இன்ரும்:

அமைப்புக்கொள்கை என்பது Pre-formation Theory. இல்லது வரும் என்போர் இதனைக் கொண்டனர். தாயது சாகினில் (ovum) நுண்ணிய வடிவில் முழுமையான குழவி உள்ளது என்றும், அதுவே பிற்பாடு வெளிப்பட்டுப் பிறக்குமென்றும் அவர் கொண்டனர்.

முன்பு இல்லாதது இப்போது தோன்றுமெனின், அதனில் தந்தைக்கோ, தாய்க்கோ சிறிதேனும் இடமில்லையாய் முடியும்.

உள்ளது...விதி இன்ரும்:

உள்ளது போகாது என்பது, ஆலவிதையினின்றும் ஆலமரம் போகாது என்றும், இல்லது வாராது என்பது, ஆலவிதையில் இல்லாத வேப்பமரம் அதனின்றும் வாராது என்றும், உள்ளதே உள்ளது என்பது, ஆலவிதையில் ஆலமரமே உள்ளது என்றும் கூறுகின்ற தற்செயல் வழக்கு. கொள்ளும் வகையாற் கொளுத்துத லாவது, பெண்ணை விட்டுப் பெண்மை போகாது என்றும், ஆணிடம் இல்லாத பெண்மை ஆணினின்றும் வாராது என்றும், பெண்ணிடமே பெண்மை உள்ளது என்றுங் கோடல். அஃதாவது, பெண்மகவு தாயினின்றே வரும் என்பது.

அவ்வாருயின், பெண்மகவிற்குத் தந்தையின் பங்கின்றித் தாயே முழுமையும் ஈந்தாள் என்னல் வேண்டும். வேண்டின், அவள் ஆண்மகவிற்காக மாத்திரமே ஈயுமாறு தந்தையே வேண்டுவாளேயன்றிப்,பெண்மகவிற்காக அவனை வேண்டுவாள் என்னும் வழக்கிற்கு இடமில்லை. முன் அசை.

ஆயினும்......நன்றுமன்:

அருந்துயர் பெண்ணுய்த் துய்க்குந் துன்பம். நன்று இகழ்ச்சிக் குறிப்பு. மன் அசை.

ஒருவனது அறம்பாவங்கட்கு ஏற்ப ஆணுய் இன்பமும் பெண்ணுய்த் துன்பமும் இறைவனுல் வழங்கப்படுவதன்றி இறைவனது விருப்புவெறுப்புக்களால் அன்று.

மாயக்......சிவபெருமானே:

மாயக்கருமம் உடம்பால் இயற்றும் அறம்பாவங்கள். கருமக் கட்டு, அவற்றிற்கேற்ற ஆண்பெண் உடம்புகள். சிவபெருமான் விளி. ஏகாரம் ஈற்றசை.

எட்டாந் திருமுறை

முதுபெரும் புலவர் பேராசிரியர் மு. சுந்தரேசம்பிள்ளை (ஓய்வு)

மாணிக்கவாசகர் ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். சமய குரவர்களில் காலத்தால் முன்னே தோன்றியவர். இறையருளைப் பெற்ற ஞானி. அவர் அருளிய ஞானப்பாடல்கள் உள்ளத்தை உருக்கும் கனிவுடையவை, "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார்" என்பது பழமொழி. அமைச்சர் பொறுப்பில் இருந்த அவர் உலகியல் அறிவு நிறைந்தவர். உலகில் உயிர்க் குற்ற துணை எது என்பதில் அவர் நாட்டம் சென்றது. உயர் பதவி, பொருள் முதலியன துணையாகா எனத் தெளிந்தார். கடவுளே மனத் துணை என்ற முடிவுக்கு வந்தார். பதவி முதலியன வாழ் முதலாகாது எனக் கொண்டு அவற்றைத் துறந்தார், செல்வம் முதலியன எய்ப்பினில் வைப்பாகும் என்ற எண்ணம் நீங்கியது, சிவனருளே எய்ப்பினில் வைப்பு என்ற மெய்யுணர்வு பெற்றார். "மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பினில் வைப்பே" என்று பாடியுள்ளார். திருப்பெருந்துறை இறைவன் மணிவாசகரை ஆட்கொண்ட திருத்தலம்: அவர் வாழ்வில் திருப்பம் தந்த துறையுமாகும், நூலறிவு என்ற அளவில் இறைவனைப் பற்றிக் கற்று அறிந்த அவர். திருப்பெருந் துறையில்தான் முதன் முதல் இறைவனை நேரில் கண்டார். புறக் கண்ணாலும்கண்டார்."மெய்யே உன்பொன்னடிகள்கண்டு இன்று வீடுற்றேன்"என்று அவரே பாடியுள்ளார். இறைவன் எல்லாப் பொருளிலும் கலந்திருப்பன். "விசுவாந்தர் யாமி" எனும் வட மொழிவேதம்".கீழுளும்மேலுளும்யாவுளும்-எள்ளுமெண்ணெயும் போனின்ற எந்தையும் (திருவாசகம் திருச்சதகம் 46) என்பர் மணிவாசகர். இது இறைவனது முழுவியாபகத்தை விளக்கும்.

இக்கருத்தினை அடியொற்றிப் பரஞ்சோதி முனிவர், ''உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர் தொறும் ஒளித்து நின்ற கள்வன்'' என விளக்கியுள்ளார்.

தனக்கு உவமையில்லாதவன் இறைவன். அவனது அருள் நிலையை விளக்குவதற்கு ஓர் உவமைதான் மணிவாசகருக்குக் கிடைத்தது. அவ்வுவமை 'அன்னையொப்பாய்'' என்பதாகும். குழந்தை பசி மறந்து உண்ணும்பால் மறந்து உறங்கும்; அக் குழந்தையின் தாய் குழந்தைக்குப் பாலூட்ட விரும்பி விழிப்புறச் செய்து பாலூட்டுவாள். இது தாய் குழந்தைபால் காட்டும் பாசம்; இப்பாசமுடைய தாயினும் சாலப்பரிந்து இறைவன் தனக்கு அருள் செய்த பெற்றியை மணிவாசகர் எண்ணி எண்ணி இன்புற்றார். அந்நிலையில் அவர் அருளிய வாசகம் ''தாயினும் சாலப் பரிந்து" என்பதாகும். குழந்தை பால் குடித்து நீண்ட நேரமாகி விட்டது என்ற எண்ணம் தாய்க்கு வரக்காரணம் குழந்தைபால் உள்ள அன்பு மட்டுமன்று; நேரம் நீண்டு விட்டதால் அவள் மார்பகத்தில் பால் நிறைந்து விம்மும். அதனால் மார்பில் வலி தோன்றும், இந்நிலையில் குழந்தை நினைவு தாய்க்கு வரத்தான் செய்யும். தாய் குழந்தைக்குப் பால் தருவாள். குழந்தையும் பாலைப் பருகி இன்பம் பெறும். தாயும் வலிநீங்கிச் சுமை கழிந்த நிலையில் இன்பம் பெறுவாள்.

இதனால் தான் மணிவாசகர் குழந்தை நினைந்து என்று கூருமல் ''பால் நினைந்து' என்று கூறியுள்ளார் எனக் கருதலாம். தாய்க்கு முதலில் நினைவுக்கு வந்தது பாலே.காரணம் படைப்பில் இறைவன் தாய்க்குத் தந்திருக்கும் உடற் கூருகும்.தாய்க்குப்பால் தேங்கிக் கிடப்பதுபோல இறைவனுக்கு அருளாகிய பால் தேங்கியிருக்காது; கோடானு கோடி உயிர்க் கூட்டங்கட்கு அருளாகிய பாலை வழங்குபவன் ஆண்டவன். இவ்வேறுபாடு தோன்றவே ''தாயினும் சாலப் பரிந்து'' என மணிவாசகர் அருளியுள்ளார் எனலாம்.

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே"

என்பது. ஆன்மாக்கள் மூன்று வகைப்படும். அவர்களுக்கு வரும் துன்பங்கட்கு மூலகாரணம் மலமாகும். உடல் நோய்க்கு மலச் சிக்கல் காரணமாவது. உயிர்களுக்கு வரும் துன்பங்கட்குக் காரணம் மலத் தொடர்பேயாகும். ஆன்மாவுக்கு ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்கள் உண்டு. ஆணவ மலத்தை மூலமலமென்பர். கன்மம், மாயை இடையே வருவன ஆதலின் அவை ஆகந்துக மலமெனப்படும். ஒரு மலமுடைய ஆன்மாக்களை விஞ்ஞான கலர் என்றும், இருமலமுடைய ஆன்மாக்களைப் பிரளயாகலர் என்றும்,மும்மலமுடைய ஆன்மாக்களைச் சகலர் என்றும் சாத்திரம் பேசும்.

ஒரு மலமுடைய விஞ்ஞான கலருக்கு இறைவன் சோதி வடிவாக உள் நின்று தன்மையில் அருள் புரிவான். இதனை "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்ற தொடராலும், இருமலமுடைய பிரளயாகலருக்கு இறைவன் மான்மழு காள கண்டம் சடை இவை தாங்கி முன்னிலையில் அருள் புரிவான். இதனை

"சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால் கொள்வெண்ணீற்றாய்"

என்றதொடராலும்மும்மலமுடையசகலருக்கு "மானுடச்சட்டை" தாங்கிப் படர்க்கையினில் நின்று அருள் புரிவான். இதனை

''பங்கயத்து அயனும் மால்அறியா
நீதியே செல்வத்திருப் பெருந்துறையில்
நிறைமலர்க்கு ருந்த மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே''

என்ற தொடராலும் மணிவாசகர் விளக்குவர். திருவாசகம் சிகாமந்திரம் எனப்படும். சிகைக்குமேல் உறுப்பில்லை. திருவாசகத்திற்கு மேற்பட்ட நூலுமில்லை. சாத்திரங்களுள் சிறந்தது சிவஞான போதம். அறநூல்களுள தலையாயது திருக்குறள். இலக்கண நூல்களுள் முதன்மையுடையது தொல்காப்பியம். தோத்திர நூல்களுள் தலையாயது திருவாசகம். சிவபெருமான் திருக்கரத்தால் எழுதப்பெற்ற சிறப்புடையது. மொத்தம் பாடல்கள் 1056. திருக்கோவையார் இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையே நிகழும் இன்ப உரையாடல்களை இயம்பும். திருக்கோவையார் பாடல்கள் 400 திருவாசகம் 51 பகுதி 656 பாடல்கள் எட்டாம் திருமுறையில் மொத்தமுள்ள பாடல்கள் 1056.

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

30—7—91 முடிய வரவு

திரு/திருமதி

சென்னை V. N. ஆறுமுக முதலியார்	111—00
தருமபுரம் சீனிவாசன்	11—00
குடந்தை அப்பு	40—00
குடந்தை சந்திரமோகன்	11—00
உக்கரை கைலாசம்	45—00
மறைஞானசம்பந்தம் பிள்ளை	15—00
திருவனந்தபுரம் K. E. மூர்த்தி	135—00
திருச்சி M. K. தைலா முதலியார்	51—00
ஆச்சாள்புரம் நடனம்பிள்ளை	11—00
திருப்பனந்தாள் S. சீனுவாசம் பிள்ளை	51—00
அத்திப்புலியூர் S. சிவராமன்	101—00
ராமநாதபுரம் ஆறுமுகம் பிள்ளை	11—00
சேலம் T. M. பூதலிங்கம்	100—00
பெண்ணுடம் சிவபழமலை பிள்ளை	11—00
உடையார்பாளையம் K. C. ராஜகுமார்	101—00
திருப்பனந்தாள் T. M. சாமிநாதபிள்ளை	101—00
பாளையங்கோட்டை சி. சு. மணி	51—00
புத்தூர் V. S. சண்முகம்பிள்ளை	101—00
புத்தூர் கோடிப்பிள்ளை	10—00
திருச்சி முத்துக்குமரன்	20—00
பாண்டி கணேசய்யர்	11—00
திருவொற்றியூர் T. V. மகாதேவன்	10—00
சத்தியவாடி திருச்சிற்றம்பலம்	100—00
ஈரோடு மங்கையர்க்கரசியார் மாதர்கழகம்	25—00
ஆக ரூ.	1234—00

செலவு

குடந்தை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு	450—00
திருவலம்புரம் வலம்புரிநாதர் ஆலயச் செலவு	630—00
தலைச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு	630—00
திருந்துதேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு	630—00
ஆக ரூ.	2340—00

ஆலயத் திருப்பணிக்கு

எஸ். ராமகிருஷ்ணன் பெங்களூர் ரூ. 303 -

திருவாசகத்தில் அடியார் நிலை

(தொடர்ச்சி)

தி. கோ. பஞ்சாபகேசன்
திருவிடைமருதூர்

இப்பிறப்பினில் இணைமலர்கொய்து நான்
இயல்பொடு அஞ்சு எழுத்தோதி
தப்பிலாது பொற்கழல்களுக்கிடாது''
(திருவாசகம் அற்புதப்பத்து-7)

இருந்த நிலையிலும், என்பிழையினைப் பொறுத்துத் திருவடிஞானம் தந்தருளிய கருணையை ''அப்பன் என்னைவந்தாண்டு கொண்ட அருளிய அற்புதம் அறியேனே'' என்று விம்முகிருர்.

10. அடியார் இணக்கமே அடிகளாரின் விழைவு:

அடியார் இணக்கத்தை மிகப் பெரிதும் விழைந்தவர் மணிவாசகப் பெருந்தகையார். இறைவன் ''விழுத்தொண்டர்க் கல்லால் தொடற்கரியன்'' நீத்தல் விண்ணப்பம்-32. அல்லவா?

"அடியார் பெயராத பெருமையனே" என்ருர் முன்னும்.

"மேவினர் பிரிய மாட்டாவிமலனர்"

என்ற கண்ணப்ப நாயனர் புராணம்-செய்யுள் 174-காண்க. அடியாரிணக்கம் வேண்டும் என்று இறைவனே விழைந்து தானே அடியார் கூட்டத்தை வைத்துள்ளான் என்பர்,

''வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்தவைத்து
இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்து''
(திருவாசகம்-திருப்பூவல்லி-7)

"அடியார்க்கு அடியன் வாதவூரடிகள்.
அடியாரைப் பணிந்து அவர்கட்கே.
பாங்காகும் போற்றினை அடிகள் வேண்டுகிருர்.

''உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன் அடியார்தாள் பணிவோம்" (திருவெம்பாவை-9)

அடியார்க்கு அடியனாகி உய்யவேண்டும் என்பர்

''உன் அடியார் அடியார் அடியோம் என உய்ந்தனம்
ஆகாதே'' (திருப்படையாட்சி-2.)

''தன் அடியார் அடி என்தலைமீது தழைப்பன ஆகாதே
தான் அடியோமுடனே உயவந்து தலைப்படும் ஆகாதே''
(திருப்படையாட்சி-6)

நம்முடைய பாதக மலங்களைப்போக்கிக் கொள்ள அடியார் பாதகமலங்கள் தாம் துணைசெய்யும். அடியார்க்கு அடியேன் என்று பாடிய சுந்தரரையும், அடியார் வழிபாட்டில் விஞ்சி நிற்கிறார் வாதவூரடிகள்.

12. அடியாரைக் கைவிடலாமா?

இறைவன் அடியாரைக் கைவிட்டுவிட மாட்டார். ஆனால் அடியார் விலகினால் அல்லது உலகமாயை செயற்படுங்காலை அடியவர்கள் அல்லலுறுகின்றார்கள். இங்கே மாணிக்கவாசகப் பெருமானும் இத்தகைய ஒருமனப் போராட்டத்தைக் காட்டுகின்றார். தன்னைச் சிவபெருமான் அடியார் என்று சொல்லிக் கொள்வதில் மணிவாசகர் பெருமிதப்படுகின்றார்.

'இறுமாந் திருப்பன் கொலோ' என்று நாவுக்கரசர் கூறியருளியதுபோல, (திரு அங்கமாலை-11)

''ஆரடியான் என்னின் உத்தரகோச மங்கைக்கரசின்
சீரடியார் அடியானென்று நின்னைச் சிரிப்பிப்பனே".
(நீத்தல் விண்ணப்பம்-48)

''சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னைவிடுதி கண்டாய் விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்சூண் பிச்சன்
ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச்சன் என்று ஏசுவனே''
(நீத்தல் விண்ணப்பம்-49)

ஏசினும் ஏத்தினும் தன்பிழைக்கே குழைந்து வேசறுகின்ற மாணிக்கவாசக சுவாமிகளையா இறைவன்விட்டு விடுவான். திருநாவலூரரான சுந்தரர் சிவபெருமானுடன் தோழமை கொண்டவர். அவர் ''நீர் அன்றி பிரானுர் இல்லையோ'' (சுந்தரர்-திருப்பாச்சிலாச்சிராமம்.)

''நீர் திருக்கோயிலுள் உளீரோ? என்றெல்லாம் வருந்திப் பாடியன நம் சிந்தையில் எழுகின்றன.

13. அடிகளாரின் ஏக்கம்:

அடியார்களுடன் கூடிக்களித்திருக்க வேண்டும் என்று வாதவூரடிகளின் விருப்பம் தடைப்படும் போது மிகவும் வருந்துகின்றுர்.

''பன்னுள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியரொடுங் கூடாது
என் நாயகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே''
(திருவாசகம்-ஆனந்தமாலை-2)

இன்பத்தைப் பெறுவதற்குரிய சாதனமாகிய அடியார் கூட்டத்தைப் பெறவேண்டும் என்பது கூறப்பட்டது.

அடியேனை உய்விக்க ஒருவழி உளது. அதனை அருளும் வண்ணம் வேண்டுகிருர்.

''ஆருருவாய என் ஆரமுதே உன் அடியவர் தொகை நடுவே
ஒருருவாய நின்திருவருள் காட்டி என்னையும்
உய்யக் கொண்டருளே''
(எண்ணப்பதிகம்-1)

14. அடியார் நடுவுள் இருப்போம்:

திருவாதரடிகளின் திருவுள்ளம் அடியார் சூழலையே மிகப் பெரிதும் நாளும் விழைந்ததற்கு ஒரு உயிர் நாடியான திருப்பாடல் சான்று பகரும்.

''உடையாள் உன்றன் நடுவிருக்கும்,
உடையாள் நடுவுள், நீ இருத்தி
அடியேன் நடுவுள், இருவீரும்
இருப்பதானல், அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய-பொன்னம்பலத்துஎம்
முடியாமுதலே! என்கருத்து
முடியும் வண்ணம், முன் நின்றே!
(திருவாசகம் கோயில் மூத்ததிருப்பதிகம்-1)

இறைவன் வசப்பட்டு அருட்சத்தி விளங்குகிருள். ''அருளது சத்தியாகும் அரன் தனக்கு" என்பது சைவசித்தாந்தம். அருட் சத்தியின் வசம் சிவம் விளங்குகின்றது. இவ்விரண்டும் அருள் வசப்பட்டு அதுவாயுள்ள என்வசம் இருக்கப்பெற்ருல், அடியேன் அடியார் வசப்பட்டு நிற்றல்திண்ணம் என்பது மணிவாசகப் பெருமான் சித்தாந்தம். இறைவன் நம்முள் விளங்கும்போது நாம் அடியார் வசப்பட்டு தானே நிற்க முடியும் என்பதும், அந்த உயரிய நிலையை அடையுமாறு பொன்னம் பலத்துப் பெருமான் முடித்து வைக்கவேண்டும் என்பதும் அடிகள் விருப்பம்.

15. அடியார்க்குப் பரிசு:

அடியார் கூட்டத்தில் அடியாராக விளங்கும்போது நாம் பெறும் பரிசு ஒன்று உண்டு.

''வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"
(பெரியபுராணம்-திருக்கூட்டச்சிறப்பு-8) அவ்வடியார்கள் என்ருலும், அவர்கட்கு இறைவன் அருளும் பரிசினை அவர்கள் விரும்பி ஏற்பர். இதோ அப்பரிசு, மணிவாசகப் பெருமான் காட்டுகின்ருர்.

''எழில்கொள் சோதி எம் ஈசன் எம்பிரான்
என்னுடை அப்பன் என்றென்று
தொழுத கையினராகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவிலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே''.
(சென்னிப்பத்து-8)

இறைவனது திருநாமத்தைப் பரவி உருகும் அடியார்களுக்கு அவனது திருவடி தவறுது கிட்டுமென்பதும், நிலையாமையை நீக்கியருளுவான் என்பதும் தெளிவாகும்.

எப்பெருந்தன்மையும் எவ்வெவர் திறமும் அப்பரிசு அதனல் ஆண்டுகொண்டு அருள்கின்முன் இறைவன் என்பதுமணிவாசகர் திருவாக்கு. அம்முறையில், தமக்கும் அடியார் சிலருக்கும் இறைவன் அளித்த பேறுகள் பற்றித் திருவாசகத்தில் கீர்த்தித் திருவகவலில் அடிகள் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள்,

1. "தேனமர் சோலைத் திருவாரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்"
2. "இடைமருததனில் ஈண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்"

(கீர்த்தித் திருவகவல் 73–76)

இறைவனல் திருவடி சூட்டப்பெறும் பேறுபெருஞ்சிறப்புடையது.

திருவாதரடிகள் இறைவனைக் குருவாகக் கொண்டார். குதிரை வணிகராகக் கண்டார். கூலியாளாகக் கண்டார். இங்கே இடைமருதில் திருவடி சூட்டப்பெற்று மகிழ்ச்சி கொண்டார்.

எந்த ஒரு ஆசிரியரும் தன்நூலின் வளர்ச்சியில் அவரும் வளருவர். அவர்தம் சிந்தனையும் கருத்தும் அனுபவத்தின் வழியே வளரும். திருவாசகப் பாடல்களுக்குள் காலத்தினலாய கருத்துவளர்ச்சி நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ளத்தக்க வகையில் திருவாசகம் தொகுக்கப்படவில்லையென்பதை நாம் அறியாமல் இல்லை. இன்றுள்ள திருவாசகம் திருவாதரடிகள் அருளிய காலவரிசையில் தொகுக்கப்படவில்லை. அவ்வாறு தொகுக்கப்படுமாயின் அடியார்கள் பற்றித் திருவாதவூரடிகள் திருவுள்ளத்தில் வளர்ந்து வந்த கருத்து வளர்ச்சியை நாம் இனிது உணர்ந்து பயனடைய முடியும். நூலறிவோடு அனுபவ அறிவும் பெற்ற அறிஞர்கள் திருவாதவூரடிகளின் இறைஞான அனுபவப் படிமுறைகளை உணர்ந்து, நாம் உய்திபெறும் வகையில் திருவாசகத்தைப் பாடிய காலவரிசையில் தொகுத்து, சைவ உலகிற்கு வழங்கின் சிறப்பாக அமையும்.

"இடை மருது உறையும் எந்தாய், போற்றி"

அரசின் பணிக்கு அறக்கொடை

தமிழக முதல்வர் மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகமெங்கினும் உள்ள திருக்கோயில்களின் திருப்பணி முதலான கைங்கர்யங்கட்காக நிறுவியுள்ள "முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும்பராமரிப்பு நிதி"-க்காக ரூ **11, 111**/-க்குரிய வங்கிப் பணவரைவை திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர், 'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ **காசிவாசி எஜமான் சுவாமிகள்** அவர்கள் அனுப்பியருளினர்கள்.

விடையரங்கம்

"ஸ்ரீ குமரகுருபரர்" இதழில் மீண்டும் வினா-விடை அரங்கம் பகுதி அலங்கரிக்க உள்ளது. அன்பர்கள் சமயம், இலக்கியம் ஆகிய துறைகள் தொடர்பாக எழுப்பும் ஐயங்கட்குத் **தமிழறிஞர்கள்** வாயிலாக விடைகள் வழங்கச் செய்யப் பெறும். அன்பர்கள் இவ் அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஐயங் களைந்து தெளிவு பெறுவார்களாக.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. ... குறள்

(தி. ஆ—ர்)

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண்: T. N. / KMB / 12.

'ஸ்ரீ குமரகுருபரர்'

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் சந்தா	ரூ. 125-00	ரூ. 325-00
ஆண்டுச் சந்தா	ரூ. 10-00	ரூ. 35-00

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வண்ணப் படம்

சைஸ் 21" × 15"	விலை ரூ. 2—00
சாதாரண அஞ்சல் செலவு	ரூ 2—00
பதிவு அஞ்சல் செலவு	ரூ 8—00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
மேலாளர்,
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள். 612 504

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா. ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீ குமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Thiruppanandal
612504

Licence No. 01. Licenced to Post without Prepayment.

திரு.